## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 57 |
| 2. | நோக்கு | 58 |
| 3. | செயற்பணி | 59 |
| 4. | தவிசாளர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை | 60 |
| 5. | பிரதான அலுவலர் சபை | 61 |
| 6. | நிறுவன ஒழுங்கமைப்பு | 62 |
| 7. | தவிசாளரின் மீளாய்வு | 63-64 |
| 8. | பணிப்பாளர் சபையின் அறிக்கை | 65-66 |
| 9. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை | 67 |
| 10. | அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் | 68-98 |
| 11. | நிதிக் கூற்றுக்கள் | 99-106 |
| | அ. ஐந்தொகை | |
| | ஆ. வருமான செலவினக் கணக்கு | |
| | இ. காசுப் பாய்ச்சல் கூற்று | |
| 12. | அரசாங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 107-114 |

**அறிமுகம்**

**நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையானது

2008ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க


நகரக் குடியிருப்பு அதிகார சபை

சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையை தாபிப்பதன் அடிப்படை நோக்கமாக இருப்பது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி சம்பந்தமான தேசிய கொள்கையை தயார்செய்தல், நிலையான நகரக் குடியிருப்பு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக் குடியிருப்புகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அந்த மக்களுக்கு ஆகக்குறைந்த நகர்ப்புற வசதிகளுக்கான அணுகுமுறைகளை ஏற்படுத்திக்கொடுத்து தற்போது காணப்படுகின்ற வீட்டு அலகுகளை மேம்படுத்துவது அல்லது மிகவும் நல்லதொரு வீடமைப்பு வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை தயார்செய்து அமுல்படுத்துவதாகும்.

## நோக்கு

நிலையான நகரக் குடியிருப்புகளில் உயர் தரம்மிக்க வாழ்க்கை முறையை உறுதிசெய்தல்



# செயற்பணி

நிலையான நகர அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக்குடியிருப்புகள் மற்றும் நகர்ப்புற பிராந்திய மக்களின் வீடமைப்பு சிக்கலுக்கு தீர்வு வழங்குதல் மற்றும் அதற்குச் சமாந்தரமாக அவர்களை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டுதல்

# 2014

2014.01.01 முதல் 2014.12.31ஆந் திகதி வரையான பணிப்பாளர் சபை

| தொ. இல. | பதவி | பெயர் | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 1 | தவிசாளர் | சட்டத்தரணி திரு. பாலித கமகே | 2010.05.24 |
| 2 | பணிப்பாளர் நாயகம் (பணிப்பாளர் சபை செயலாளர்) | டாக்டர் திரு. சுமித் வன்னிஆரச்சி | 2010.05.26 |
| 3 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | சங்கைக்குரிய இத்த கந்தே சத்தாதிஸ்ஸ தேரர் | 2010.05.24 |
| 4 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. டப்ளியூ.எம்.பி.பி. விக்ரமசிங்க | 2012.01.05 |
| 5 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஏ.எம். வீரசேன | 2013.08.16 |
| 6 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஏ.டப்ளியூ. தயானந்த | 2010.07.07 |
| 7 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ரீ.எம்.ஜே. பண்டார | 2013.10.01 |
| 8 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. பேனார்ட் காரியவசம் | 2010.05.24 |
| 9 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ரனில் பிரியந்த பிரனாந்து | 2010.05.24 |
| 10 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஏ.எச். சுரே‘ இந்திக | 2010.05.24 |
| 11 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. அஜித் கித்சிறி பண்டார | 2010.05.24 |
| 12 | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திருமதி பி.ஜி.எஸ். குணதிலக்க | 2010.05.24 |


## 2014

பிரதான அலுவலர் சபை

2014.01.01ஆந் திகதி முதல் 2014.12.31ஆந் திகதி வரை

| தொ. இல. | பதவி | பெயர் | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 1 | தவிசாளர் | சட்டத்தரணி திரு. பாலித கமகே | 2010.05.24 |
| 2 | பணிப்பாளர் நாயகம் | டாக்டர் திரு. சுமித் வன்னிஆரச்சி | 2010.05.26 |
| 3 | பணிப்பாளர் (சமூக திரட்டல்) | திரு. வை.ஆர். த சில்வா | 2011.11.01 |
| 4 | பணிப்பாளர் (நிதி) | திரு. என்.ஜி.ஜி. டயஸ் | 2011.02.01 |
| 5 | பணிப்பாளர் (திட்டமிடல், த.தொ.) | திரு. எம்.டி.கே. சந்தரசேன | 2011.02.01 |
| 6 | உள்ளக கணக்காய்வாளர் | திரு. எல்.ஆர்.ஏ. ‘ாந்த | 2011.02.01 |
| 7 | உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | திருமதி. டி.ஏ. தேவிகா திசாநாயக்க | 2011.11.01 |
| 8 | உதவிப் பணிப்பாளர் (சமூக திரட்டல்) | செல்வி பி.எஸ். கமகே | 2011.11.01 |
| 9 | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சியும் ஆபிவிருத்தியும்) | திருமதி கே.ஏ.டப்ளியூ.ரி.பி.டி. சில்வா | 2011.11.01 |
| 10 | உதவிப் பணிப்பாளர் (வழங்கல்) | திரு. ஆர்.டி.எஸ்.பெர்ணாந்து | 2014.05.26 |
| 11 | உதவிப் பணிப்பாளர் (நிதி) | திரு. ஏ.எம்.கே. பண்டார அதாவுத | 2012.06.11 |
| 12 | உதவிப் பணிப்பாளர் (கட்டிடக்கலை) | திருமதி எம்.எஸ்.வி. விபுலகுன | 2012.08.08 |
| 13 | உதவிப் பணிப்பாளர் (காணி) | திரு. டபிள்யு.பி.யு.கே. பெரேரா | 2014.11.10 |
| 14 | உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | திரு. ஏ.பி.ஆர். ஞானப்பிரிய | 2014.11.17 |

# 2014 ஒழுங்கமைப்பு



# தவிசாளரின் மீளாய்வு

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தினால் தாபிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 6 ஆவது ஆண்டு நிறைவைப் பதிவு செய்துள்ளது. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஆரம்பம் முதல் இதுவரை மற்றும் எதிர்காலத்திலும் நகரக் குடியிருப்புக்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயத்தை இலக்காகக் கொண்டு பௌதீக மற்றும் மனித அபிவிருத்தி ஆகிய இரண்டுவித அணுகுமுறைகளின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுவதும், அமுல்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ் இருவித அணுகுமுறைகளில் பௌதீக அபிவிருத்தி எனும் எண்ணக்கருவின் கீழ் தற்போது பூரணமாக நிறைவு செய்யப்பட்டுள்ள சுமார் 456 வீடுகள் (இதன் பெறுமதி ரூ.மி. 1475.5) தேசிய வீடமைப்புத் தொகுதியில் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆண்டில் தொடர்ச்சியான சருத்திட்டங்களாக மொரட்டுவை லுனாவ நகரத் தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம், தலவாக்கலை லிந்துல நகர மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம் மற்றும் சிலாபம் மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டத்தைக் குறிப்பிட முடியும் என்பதுடன், லுனாவ நகர தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டமானது 460 சது அடிகளைக் கொண்ட 356 வீட்டு அலகுகளை உள்ளடக்கியதாகும் என்பதுடன், 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இதன் பௌதீக முன்னேற்றம் சுமார் 45%ஆகும். இதன் திருத்திய மொத்த மதிப்பீடு ரூ.மி. 1369.32 ஆகும்.

தலவாக்கலை லிந்துல நகர மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம் 54 வீட்டு அலகுகளை உள்ளடக்கியதாகும் என்பதுடன், (முதற் கட்டம்) இதன் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவின் ரூ.மி. 84.5 ஆகும். 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இதன் பௌதீக முன்னேற்றம் சுமார் 60%ஆகும்.

சிலாபம் நகர மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம் 500 சதுர அடிகளைக் கொண்ட 57 வீட்டு அலகுகளை உள்ளடக்கியதாகும் என்பதுடன்,இதன் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவின் ரூ.மி. 49.7 ஆகும். 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இதன் பௌதீக முன்னேற்றம் சுமார் 100%ஆகும்.

அதற்கமைய நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 2014 இன் தொடர்ச்சியான கருதிட்டங்களான மொரட்டுவை லுனாவ நகரத் தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம், தலவாக்கலை லிந்துல நகர மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம் மற்றும் சிலாபம் மீள்வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டம் ஆகிய கருத்திட்டங்கள் மூலம் எதிர்காலத்தில் தேசிய வீடமைப்புத் தொகுதியுடன் இணைக்க உத்தேசித்துள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 467 ஆகும்.

2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சனசெவண திறிய நகர்ப்புற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் கொழும்பு மாவட்டத்தில் வீட்டு உரிமையாளர்கள் 252 பேரின் வீடமைப்புத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக கொழும்பு மாவட்டத்தின் கடுவலை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள நிரந்தர பகுதியளவில் பூர்த்தி

செய்யப்பட்டுள்ள வீடுகளை மீளவீடமைப்புமயமாக்கலுக்கான உச்ச கடன் எல்லை ரூபா 200,00.00 எனும் வரையறைக்கு உட்பட்டு மொத்தப் பெறுமதி ரூ.மி. 50 ஆன செலவினத்தில் வீடமைப்புக் கடன் கருத்திட்டமொன்று 2014 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டதுடன், ஆண்டின் இறுதியில் இதன் பௌதீக முன்னேற்றம் சுமார் 42% ஆகும்.

2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக் குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் வலுவூட்டுவதை நோக்காகக் கொண்ட ஜனசெவண சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இந்த ஆண்டும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டது. இதன் கீழ் குடியிருப்புக்களில் வாழும் சிறுவர்கள், இளைஞர், யுவதிகள் பல்வேறு போட்டிகள் மற்றும் தொழில் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதுடன், பெண்களை பிரதானமாகக் கொண்ட சுயதொழில் வாய்ப்பாக சிற்றுண்டி உணவுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள குடியிருப்புக்களில் வாழும் பெண்கள் 200 பேரின் பங்கேற்புடன் வீதி உணவு நிகழ்ச்சித்திட்டமொன்று கொழும்பு 07 கிரீன்பாத்தில் அமுல்படுத்தப்பட்டது. இதன் போது மேற்படி கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களை ஊக்குவிப்பதற்காக இலவசமாக கேஸ் சிலின்டர் மற்றும கேஸ் அடுப்பும் வழங்கப்பட்டது.

2014 உலக குடியிருப்பு தினமானது நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், பெண்களை இலக்காகக் கொண்டு சித்திரப் போட்டி, கட்டுரைப் போட்டி, நாடகப் போட்டி, கிரிக்கட் போட்டி போன்றன ஒழுங்கப்பட்டு வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது.

2014 ஆம் ஆண்டை தொடர்ச்சியான கருத்திட்டங்களை தொடர்ந்தும் அமுல்படுத்தல் மற்றும் புதிய கல கருத்திட்டங்களை அமுல்படுத்தியதன் மூலம் அதிகார சபையின் நோக்கான 'நிலையான நகரக் குடியிருப்புக்களில் உயர் தரமான வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்வதை' அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட ஆண்டாகக் குறிப்பிட முடியும்.

**ரஞ்சித் சாந்த கஹவல**
**தவிசாளர்**
**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

# பணிப்பாளர் சபை அறிக்கை

2014.12.31ஆந் திகதிக்கு நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை பின்வருமாறாகும்.

சட்டத்தரணி திரு. பாலித கமகே – தவிசாளர்
டாக்டர் சுமித் வன்னிஆரச்சி, பணிப்பாளர் சபை செயலாளர்
சங்கைக்குரிய இத்தகந்தய சத்தாதிஸ்ஸ தேரர், பணிப்பாளர்
டபிள்யூ.எம்.பி.ஜி. விக்ரமசிங்ஹ, பணிப்பாளர்
திரு. ஏ.எம்.வீரசேன,பணிப்பாளர்
திரு. ஏ.டபிள்யூ. தயாநந்த, பணிப்பாளர்
திரு. ரி.எம்.ஜே. பண்டார, பணிப்பாளர்
திரு. பேர்னாட் காரியவசம்,பணிப்பாளர்
திரு. ரனில் பிரியந்த பெர்னான்டோ, பணிப்பாளர்
திரு. ஏ.எச். சுரே‘ இந்திக்க, பணிப்பாளர்
திருமதி பி.ஜி.எஸ். குணதிலக்க, பணிப்பாளர்
திரு. அஜித் கித்சிரிபண்டார, பணிப்பாளர்

மீளாய்வு ஆண்டில் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 11 நடாத்தப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையின் உபகுழுவாக செயற்பட்டு வருகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 2014ம் ஆண்டில் 05 கூட்டங்களை நடாத்தியுள்ளது. பணிப்பாளர் சபை அங்கத்தவர்களான கீழே பெயர்குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்பட்டு வருகின்றனர்.

திரு. ரி.எம்.ஜே. பண்டார– தவிசாளர்
திரு. பேனாட் காரியவசம்
திரு. ரனில் பிரியந்த பெர்னான்டோ
திரு. ஏ.எச். சுரே‘ இந்திக
திரு. அஜித் கித்சிறி பண்டார

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக் குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு வீடமைப்பு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் நகர்ப்புரப் பிரதேசங்களில் அமைந்துள்ள வாழ்வதற்கு பொருத்தமற்ற வீடமைப்புக்களை உயர்தரம்மிக்கதாக மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய நகர்ப்புறக் குடியிருப்புகளில் வாழும் மக்களின் சமூக, பொருளாதார நிலைமை அபிவிருத்தி செய்வதற்கான மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 12வது மற்றும் 13.6வது பிரிவுகளுக்கு அமைய நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுக்கல் வாங்கல்களையும் முறையாக கணக்குகளில் பதிவுசெய்து கணக்குப் பதிவேடுகளை பேணிவருவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு மற்றும் அதிகாரசபையின் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் குறித்த ஆண்டக்கான மிகை ∴ குறை பற்றிய உண்மையான நியாயமான கருத்தை பெற்றுக்கொடுக்கின்ற நிதிக்கூற்றுக்களை தயார்செய்ய வேண்டிய பொறுப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய முறையாக கணக்கு பதிவேடுகளைப் பேணிவருமாறும், நாளாந்தம் நடாத்தப்படுகின்ற கூட்டங்கள் மற்றும் கணக்காய்வுக்குழுக் கூட்டங்களின் ஊடாக நிதி அறிக்கையிடல் முறையியலை மீளாய்வு செய்யுமாறும் பணிப்பாளர் சபை அதிகார சபைக்கு கட்டளையிட்டுள்ளது.

இந்த ஆண்டறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயார்செய்யும்போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்புடையவாறு உரிய கணக்கீட்டு தர நியமங்களை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கும் நியாயமாகவும் அறிவுபூர்வமான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் பணிப்பாளர் சபை கவனம் செலுத்தியுள்ளது.

அதிகாரசபைக்கு உரித்தான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளை கண்டறிதல் மற்றும் அவற்றைத் தடுத்துக்கொள்வதற்கும் பணிப்பாளர் சபை நடைமுறையில் தாம் மேற்கொள்ளக்கூடிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பில் செயற்படும்போது பணிப்பாளர் சபையினால் அதிகாரசபையின் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் அதன் அறிக்கைகள் பற்றிய உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை நடைமுறைக்கு சாத்தியமானவாறு முடிந்தளவுக்கு பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வகையில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சேவைகளை முறையாகவும் நிறைவேற்றத் தேவையான உள்ளக பரிசீலனைகள், உள்ளக கணக்காய்வு, நிதி மற்றும் ஏனைய கட்டப்பாடுகளைக் கொண்ட விளைதிறனும் பூரணத்துவமும்மிக்க உள்ளக கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு தாபிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் செயலாளர்

பணிப்பாளர் நாயகம்
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

# கணக்காய்வுக்குழு அறிக்கை

நல்ல நிதியியல் அறிக்கையிடல் முறையியல் காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மற்றும் முகாமைத்துவம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சரியான, பொருத்தமான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் அதனை நல்ல முறையில் முகாமைத்துவம் செய்வதை உறுதிப்படுத்துவதற்கும் சட்டங்கள் மற்றும் அதிகார சபையின் கொள்கைகள் மற்றும் நியாயாதிக்க மற்றும் கூட்டிணைக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு ஏற்புடையவாறு கணக்கீட்டு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கும் மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்யும் அதிகாரம் கணக்காய்வுக்குழுவுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் திறைசேரி பிரதிநிதி மற்றும் ஏனைய பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 04 பேரை உள்ளடக்கியதாக கணக்காய்வுக்குழு தாபிக்கப்பட்டுள்ளது. அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய வழிகாட்டல்களுக்கு அமைய பணிப்பாளர் சபையின் திறைசேரி பிரதிநிதி, பணிப்பாளர் – அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்,திரு ரீ.எம்.ஜே. பண்டார 2014 ஆம் ஆண்டின் குழுத்தவிசாளராக செயற்பட்டார். திரு. பேனாட் காரியவசம், திரு. ரனில் பிரியந்த பெர்னான்டோ, திரு. ஏ.எஸ். சுரேஷ் இந்திக்க மற்றும் திரு. அஜித் கித்சிறி பண்டார ஆகியோர் குழுவின் அங்கத்தவர்களாக செயற்பட்டு வந்தனர்.

அரசாங்கத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் ஒருவர் அவதானிப்பாளராக கணக்காய்வு குழுக் கூட்டங்களில் பங்கேற்றதுடன் தேவையானவாறு நகரக் குடியிருப்பு அதிகாரசபையின் ஏனைய அலுவலர்கள் பலர் இந்தக் கூட்டங்களில் பங்கேற்றனர். அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் இந்த குழுவின் செயலாளராக செயற்பட்டார். உள்ளக கணக்காய்வாளரினால் தயார்செய்யப்பட்ட 2014ஆம் ஆண்டுக்கான விரிவான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் இந்தக் குழுவினால் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மீளாய்வு ஆண்டில் இந்த குழுவின் 05 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. கணக்காய்வுகள் அறிக்கைகள், கணக்காய்வு வினாக்கள் தொடர்பிலான கேள்விகள் மற்றும் பதில்கள், உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வுகளின் அவதானிப்புகள், உலக கட்டுப்பாட்டுக் கட்டமைப்புகள் மற்றும் ஆண்டறிக்கையை உரிய நேரத்திற்கு தயார்செய்து சமர்ப்பிக்க வேண்டியதன் தேவை பற்றி விசேட கவனம் செலுத்தல் உள்ளடங்கலாக மேம்படுத்துவதற்குத் தேவையான ஏனைய துறைகள் பற்றி இந்தக் குழு கலந்துரையாடியுள்ளது. தேவையாவாறு சீராக்கல்களை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்புடையவாறு பின்னாய்வு நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளன.

அங்கத்தவர்கள் மற்றும் அலுவலர்கள் வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்பு மற்றும் குறிப்பாக கணக்காய்வு செய்முறையின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழங்கிய மிகமுக்கிய அவதானிப்புகள் தொடர்பிலும் நான் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கட்டளைக்கமைய

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயலாளர்

ரஞ்சித் சாந்த கஹவல

பணிப்பாளர் நாயகம்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

## அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் - 2014

2014 ஆம் ஆண்டில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பின்வரும் வகையில் மூன்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

01. பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

02. நகர குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கான மீள் வீடமைப்பு மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

03. நகர்ப்புறபிரதேசங்களில் அமைந்துள்ள தற்காலிக மற்றும் பகுதியளவான நிரந்தர வீடுகளை தரமான வீடுகளாக மாற்றியமைக்கும "ஜனசெவன திரிய" நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

04. "ஜனசெவன சுயசக்தி" மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

### பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நகர்ப்புற பிரதேசங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களின் வீடுகள் உள்ளடங்கலாக பௌதீக சூழல், நிலையான நகர மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி அணுகுமுறையின் கீழ் அபிவிருத்தி செய்வது நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முக்கிய நோக்கமாகும் என்பதுடன் இலக்காக் கொள்ளும் சமுதாயத்தை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டுவதும் எமது அதிகார சபையின் நோக்கங்களுள் உள்ளது.

அதற்கமைய 2011ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பௌதீக அபிவிரத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வரும் இரண்டு பிரதான நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.

1. நகர குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் உள்ள மக்களை மீள்வீடமைப்பு மயமாக்கும் நிகழ்ச்சித்திட்டம்

2. நகரப் பிரதேசங்ளில் அமைந்துள்ள தற்காலிக மற்றும் பகுதியளவிலான நிரந்தர வீடுகளை தரமான வீடுகளாக மாற்றியமைக்கும் நிகழ்ச்சித்திட்டம்

**நகர குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் உள்ள மக்களை மீள்வீடமைப்பு மயமாக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

2011ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சித்திட்டம் 2014ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டது. நகர்ப்புற அதிகாரப் பிரதேசங்களுக்கு உரித்தான உள்;ராட்சி மன்ற பிரதேசங்களில் அமைந்துள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளின் தகவல்களை குறித்த

மன்ற தலைவர்களின் ஊடாக பெற்றுக்கொண்ட பின்னர் தயார்செய்யப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்கள் இதற்கமைய அமுல்படுத்தப்படுகின்றன.

இதன் கீழ் தொடர்ச்சியான கருத்திட்டங்கள் மற்றும் புதிய பல கருத்திட்டங்கள் 2014ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன.

**தொடர்ச்சியான கருத்திட்டங்கள்**

- மொறட்டுவை அங்குலான தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம்
- மொரட்டுவை லுனாவ தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம்
- ஜனசெவனதிரிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (கட்டம் ஐ)
- தலவாக்கலை– லிந்துல நகர மீள்வீடமைப்பு மயமாக்கல் கருத்திட்டம்
- சிலாபம் நகர மீள்வீடமைப்பு மயமாக்கல் கருத்திட்டம்

**புதிய கருத்திட்டங்கள்**

- ஜனசெவனதிரிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (கட்டம் ஐஐ)
- சீதாவக்கபுர வீடமைப்புக் கருத்திட்டம்
- திருகோணமலை சமுத்திரகம வீடமைப்புக்கருத்திட்டம்

  - **மொறட்டுவை அங்குலான நகர தொடர்மாடி வீடமைப்புக்கருத்திட்டம்**
  - ***மொறட்டுவை நகர சுற்றாடல் மற்றும் மனித குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்***

மொறட்டுவை நகர, சுற்றாடல் மற்றும் மனித குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள மொறட்டுவை அங்குலான தொடடிர்மாடி வீடமைப்புக்கருத்திட்டம், மொறட்டுவை அங்குலான கரையோரப்பிரதேசத்தில் சுனாமி அனர்த்தம் மற்றும் அடிக்கடி இடம்பெறுகின்ற கடலரிப்பினால் பாதிக்கப்படுகின்ற நிரந்தர வீடொன்று இல்லாத குறைந்த வசதிகளின் கீழ் வாழ்ந்து வருகின்ற சமுதாயத்தினர் மற்றும் மொறட்டுவை நகரப் பிராந்தியத்தில் வாழும் குறைந்த வருமானம் பெறும் சமுதாயத்தினருக்கு நிரந்தர வீடமைப்புத்தீர்வைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டமாகும்.

மொறட்டுவை மாநகரசபை அதிகாரப்பிரதேசத்தில் அங்குலான வடக்கு கிராம அலுவலர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மீள் வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டமானது 2011 ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.



## அங்குலான 'சயுரபுர' வீடமைப்புக் கருத்திட்டத்தை திறந்துவைத்தல்

இரண்டு படுக்கையறைகள், ஒரு உணவறை, ஒரு மண்டபம், ஒரு பெல்கனி, ஒரு சமையலறை மற்றும் ஒரு மலசலகூடம், குளியலறையைக் கொண்டதாக 500 சதுர அடிகள் அளவான 288 வீடுகளைக் கொண்டதாக 9 மாடிகளில் இந்த வீடமைப்புக்கருத்திட்டம் நிர்மாணிக்கப்பட்டது. சமுதாய மண்டபம், 06 மின்தூக்கிகள் உள்ளடங்கலாக சகல தொடர்மாடி வீடுகளும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் நிர்மாணிப்பு மற்றும் ஆலோசனையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டது. இந்த தொடர்மாடி வீடமைப்புக்கருத்திட்டம் 2014 நவம்பர் மாம் 18 ஆம் திகதி மேன்மைதங்கிய சனாதிபதி மகிந்த ராஜபக்‘ அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது. திருத்திய மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூ.மி.





1,255.578 ஆகும்.

“

வீடமைப்புக் கருத்திட்டத்தை உரிமையாளர்களிடம்


## ‘சயுரபுர’வீடமைப்புக் கருத்திட்டத்தின் மலசலகழிவகற்றலுக்கு உயிர்மாற்றியலான செரிமானச் செயற்பாட்டுக் கட்டமைப்பு

## (யுயெநசழடிைஉ னுபைநளவழைெ ளூலளவநஅ)



மத்திய கட்டமைப்பைக் கொண்ட கொழும்பு நகரத்திற்கு வெளியே நகரத் தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்தும் போது எதிர்நோக்கும் முக்கிய சிக்கலொன்றாக மலசல கழிவகற்றல் காணப்படுகின்றது. குறைந்த வருமானம்பேறுவோருக்கான வீடமைப்புத்திட்டத்தை அமுல்படுத்தும் போது இந்த நிலைமை மிக முக்கியமானதாக இருப்பது செயற்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பான செலவினம் மேற்படி சமுதாயத்திற்கு தாங்கிக்கொள்ளத்தக்க மட்டத்தில் பேணிவருவது அத்தியாவசியமாக உள்ளதனாலாகும்.

வேறு வீடமைப்புத் திட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள மலசல கழிவகற்றல் கட்டமைப்புக்களின் நிலைமை மற்றும் செலவினம் தொடர்பாக ஆராய்ந்த பின்னர் மேற்படி வீடமைப்புத் திட்டத்திற்கு உயிர்மாற்றியலான கட்டமைப்பை ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



உயிர்மாற்றியலான செரிமானச் செயற்பாட்டுக் கட்டமைப்பின் நன்மைகள் :

- பசுமைநிலைய வாயுவை வெளியேற்றுவது குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.
- மீதேன் வாயு உற்பத்தியானது உச்ச மட்டத்தில் காணப்படுகின்றது.
- காலநிலை மாற்றத்தில் தாக்கம் செலுத்துகின்ற காபன் மட்டம் அதிகரிக்காத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமாகச் செயற்படுகின்றது.
- செயன்முறைக்கு மின்சாரமோ அல்லது வேறு எரிசக்தி மூலமொன்றையோ பயன்படுத்தத் தேவையில்லை.
- சுற்றாடலின் நிலைமைகளுக்கு பொருத்தமான செயன்முறையாகும்.
- அசையும் கட்டமைப்பொன்றை விடவும் ஆகக் குறைந்த புலன்களின் பகுதிகள் எஞ்சுதல்.
- செரிமானம் அடையும் செயற்பாட்டின் மூலம் கேஸ், நீர் மற்றும் ஆகக் குறைந்த புலன்களின் பகுதிகள் எஞ்சுதல்.
- வாயுவை உட்புகுத்தும் செயற்பாடு மேற்கொள்ளப்படாமை காரணமாக ஆகக் குறைந்த செயற்பாட்டுச் செலவினம்.
- ஆகக் குறைந்த பராமரிப்புச் செலவினம்.
- வேறு கட்டமைப்புக்களுடன் ஒப்பிடுகையில் கூடுதல் கொள்ளளவு மாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடிதல்.
- தற்போது பிரபல்யப்படுத்தப்படுகின்ற பசுமை எண்ணக்கருவுக்கு ஏற்புடைதான கட்டமைப்பாதல்.

இந்த நிலைமையைக் கவனத்தில் கொள்ளும் போது இவ்வாறான நகரக் குறைந்த, நடுத்தர வருமானம் பெறுவோருக்கு பொருத்தமான சுற்றாடலுக்குச் சாதகமான மலசல கழிவகற்றல் கட்டமைப்பு என்ற வகையில் இந்த உயிர்மாற்றியலான செரிமானச் செயற்பாட்டுக் கட்டமைப்பு மிகப் பொருத்தமானதாகும்.

## ‘சயுரபுர’வீடமைப்புக் கருத்திட்டத்தின் சமுதாய மற்றும் பொது வசதிகள்




திடீர் மின்துண்டிப்புக்களின் பொதுவான பிரதேசங்களுக்கு மற்றும் மின்தூக்கிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் பிரதான மின்சாரக் கட்டமைப்பு மூலம் நல்ல மின் விநியோகத்தை உறுதி செய்வதற்காக முக்கலை மின்மாற்றி மற்றும் அதற்கான வெளிப்புற மின் இணைப்பு உள்ளது என்பதுடன், நவீன தொடர்மாடி வீடுகளில் பயன்படுத்தப்படுகின்ற தரமான தீப் பாதுகாப்புக் கட்டமைப்பும் காணப்படுகின்றது.



பிரதேசத்தின் நீர் விநியோக நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு தொடர்ச்சியாக நீர் விநியோகிப்பதற்கான போதியளவு கொள்ளளவுடன் நிர்மாணிக்கப்பட்ட நிலக்கீழ் நீர் களஞ்சியப்படுத்தும் நீர்த் தாங்கி, கட்டிடத்தின் மேற்புறமாக அமைந்துள்ள நீர் விநியோகிக்கும் தாங்கி மற்றும் பம்பி அறையைக் கொண்டதாக வீடமைப்புக் கருத்திட்டம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடத்தின் கீழ் மாடியில் 2,650 சதுர அடிகள் அளவான சகல வசதிகளையும் கொண்டதாக, மேற்படி சமுதாயத்தின் வைபவங்களுக்குப் பயன்படுத்தக்கூடியவாறு திட்டமிடப்பட்டுள்ள பூரணமான சமுதாய மண்டபமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய சகல பொது வசதிகளையும் கொண்டதாக 6,150 சதுர அடிகளைக் உள்ளடக்கிய பொதுவான பிரதேசமும் காணப்படுகின்றது.

கருத்திட்டம் மற்றும் பயனாளிகளின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள காபட் வீதிகள், எல்லை வேலிகள், பிரவேச நுழைவாயிலைக் கொண்டதாக பாதுகாப்பான சூழலில் அமைந்துள்ள இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தில் கிராம அலுவலர் அலுவலகமொன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.





மொறட்டுவை லுனாவ தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டமானது மொறட்டுவை நகர, சுற்றால் மற்றும் மனிதக்குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற இரண்டாவது கருத்திட்டமாகும். மொறட்டுவை லுனாவ கரையோர அபாய வலயத்தில் நிரந்தர வீடுகளின்றி குறைந்த வசதிகளின் கீழ் வாழும் சமுதாயத்தினருக்கு நிரந்தர வீடமைப்புத்தீர்வைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மொறட்டுவை மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தில் லுனாவ தெற்கு கிராம அலுவலர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வீடமைப்புக்கருத்திட்டமானது 2012 ஜூலை மாதம் 875 மில்லியன் ரூபா ஆன மொத்த மதிப்பீட்டுச் செலவினத்துடன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு பெல்கனி, ஒரு மண்டபம் மற்றும் உணவு உட்கொள்ளும் அறை, இரண்டு படுக்கைஅறைகள், ஒரு சமையலறை மற்றும் ஒரு மலசலகூடத்துடனான குளியலறையை உள்ளடக்கியதாக சுமார் 460 சதுர அடியைக் கொண்ட 356 வீட்டு அலகுகள் இதில் உள்ளடங்குகின்றன. இந்த தொடர்மாடி வீடமைப்புக்கருத்திட்டத்தில் 2014 டிசெம்பர் 31ஆந் திகதிக்கு 45%மான பௌதீக முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூ.மி. 1"369"316ஆகும்.

# தலவாக்கலை– லிந்துல்ல நகர வீடமைப்பு மயமாக்கல் கருத்திட்டம்

***சமுதாய பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறை***



தலவாக்கலை லிந்துல்ல வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டமானது தலவாக்கலை நகரத்தில் இனங்காணப்பட்ட குறைந்த வசதிகளைக் கொண்ட 03 குடியிருப்புகளில் உள்ள சமுதாயத்தின் வீடமைப்புத்தேவைகளை நிறைவேற்றுதல், உயர்மட்ட சுற்றுலா வாய்ப்பைக்கொண்ட சூழலுக்கு உணர்வுபூர்வமான நகர வலயமொன்றான தலவாக்கலை நகரத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய அடிப்படை நோக்கங்களுடன் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டமாகும் என்பதுடன் 2012ஆம் ஆண்டு யூலை மாதம் ரூ.மி. 84.5 ஆன மொத்த மதிப்பீட்டுச் செலவினத்துடன் முன்னெடுக்கப்பட்ட கருத்திட்டமாகும்.

தலவாக்கலை நகரத்துக்கு மத்தியிலுள்ள“மேல் லயம்” பழைய சந்தைக்கருகே உள்ள குடியிருப்பு மற்றும் “லோகிய”ஆகிய குடியிருப்புகளில் வாழும் 96 குடும்பங்கள் தலவாக்கலை – லிந்துல வீடமைப்பு மயமாக்கல் கருத்திட்டத்திற்கு இனங்காணப்பட்டதுடன் இந்த கருத்திட்டத்தின் முதற்கட்டத்துக்கு மேல்லயம், பழைய சந்தைக்கு அருகே வாழும் 54 குடும்பங்கள் பயனாளிகளாக இனங்காணப்பட்டனர்.

## தலவாக்கலை– லிந்துல்ல வீடமைப்புமயமாக்கல் கருத்திட்டத்திற்கு சமுதாய பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறையை பயன்படுத்திக் கொள்ளல்

குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் குறைந்த வருமானம் பெறுகின்ற நகர சமுதாயத்தினருக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்படுகின்ற உயர்ந்த நிர்மாண செலவினத்தைக் குறைத்துக்கொள்ளல், மக்களுக்கு உரித்தாக்கல், தமது வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்கு பயனாளியும் பங்கேற்பதன் மூலம் ஏற்படுகின்ற சய ஊக்கம் சமுதாய பங்கேற்பு அபிவிருத்தி அணுகமுறை ஊடாக தலவாக்கலை – லிந்துல வீடமைப்பு மயமாக்கல் கருத்திட்டம் பெற்றுக்கொண்ட நன்மை பயக்கும் நிலைமைகளாகும். இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தை திட்டமிடுவது முதல் வீடுகளை பயனாளிகளுக்கு பெற்றுக்கொடுத்த பின்னர் ஒருவருட காலப்பகுதிக்குள் வீடுகளை பராமரிப்புச் செய்வது வரையான சகல கட்ட பணிகளும் சமுதாயத்தின் பங்கேற்பு அணுகுமுறையியல் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன், 2014 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான பௌதீக முன்னேற்றம் 60ஸ ஆகும்.





**சமுதாய பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறையின் கீழ் வீடமைப்புக் கருத்திட்டத்தை நிர்மாணிக்கல்**

## சிலாபம் நகர மீள் வீடமைப்பு மயமாக்கல் கருத்திட்டம்

### சமுதாயப் பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறை

சிலாபம் நகரத்திற்கு மத்தியில் குறைந்த வசதிகளுடன் வாழும் சிலாபம் நகர சபையில் சேவையாற்றுகின்ற சுகாதார ஊழியர் சமுதாயத்திற்கு நிரந்தரமாக வீட்டுத்தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து அவர்களை பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டுவது மற்றும் சிலாபம் நகரத்தை நிலையான நகரம் ஒன்றாக மிள் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் 2013 செம்தெம்பர் மாதம் ரூ.மி. 49.7 ஆன செலவின மதிப்பீட்டுடன் இந்த சிலாபம் வீடமைப்பு மயமாக்கல் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.





*சிலாபம் நகரத்திற்கு மத்தியில் முறையற்ற விதத்தில் பரந்து காணப்படுகின்ற சிலாபம் நகரசபை ஊழியர்களின் தற்காலிக வீடுகள்*

இந்த வீடமைப்பு மயமாக்கல் கருத்திட்டத்தை பயனாளிகளின் பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறையின் ஊடாக அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நிர்மாணிப்புச் செலவினத்தை குறைத்துக் கொள்வதற்காக சுற்றாடலுக்குச் சாதகமான நிர்மாணிப்புத் தொழில்நுட்ப முறையியல்களை (ஒடுக்கப்பட்ட செங்கல்) பரீச்சார்த்த அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய 06 பர்சஸ் அளவான காணிப் பிரதேசத்தினுள் ஒரு மண்டபம், 02 படுக்கை அறைகள், சமையலறை, மலசலகூடத்தைக் கொண்ட குளியலறை,இருக்கையறை உள்ளடங்களாக 500 சதுர அடிகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்ட 57 தனித்தனியான வீடுகளைக் கொண்ட இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிர்மாணிப்புக்களின் பௌதீக முன்னேற்றம் 100ஸஆகும்.





## ஜனசெவன திரிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

நகர்ப்புற வலயங்களில் வாழும் சமுதாயத்தினருக்கு வீடமைப்புத்தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து மேற்படி சமுதாயத்தினரின் தற்காலிக மற்றும் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளை தரமான வீடுகளாக மாற்றியமைத்தல், சமுதாயத்தை பொருளாதார, சமூக ரீதியாக வலுவூட்டல் மற்றும் அதன் மூலம் நிலையான நகர வீடமைப்பு அபிவிருத்தி செயன்முறையை உறுதிப்படுத்தும் பரந்த நோக்கத்துடன் எமது அதிகாரசபையின் பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திரிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டது.

நாளாந்த சம்பளம் பெறுகின்ற ஊழியர்கள், சுயதொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள சமுதாயத்தினர் வங்கி போன்ற முறையான நிதி நிறுவனங்களுக்குச் செல்லும் ஆற்றல் இல்லாத அதாவது நிரந்தர மாதாந்த

வருமான மூலங்களற்ற உயர்மட்ட பிணைகளைச் சமர்ப்பிக்கும் ஆற்றல் இல்லாத குறைந்த வருமானம் பெறும் சமுதாயத்தினரை இலக்காகக் கொண்டு இந்த வீடமைப்புக்கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வீடமைப்பு அபிவிருத்திப் பணியின் கீழ் நிதி வசதிகளுடன் தொழில்நுட்ப ஆலோசனை, திட்டமிடல் ஆலோசனை போன்றன எமது அதிகாரசபையின் கீழ் இயங்கிவருகின்ற மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மேற்படி பயனாளிகளுக்கு வழங்கப்படுவதுடன், பொருளாதார மற்றும் சமூக ரீதியாக வலுவூட்டுவதையும் உள்ளடக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. வீடமைப்புப் பணிகளை திட்டமிடுவது முதல் நிர்மாணிக்கும் பணிகள் நிறைவடையும் வரை நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்ப அலுவலர்கள் இதனை கண்காணிப்புச் செய்தனர். இந்தப் பயனாளிகள் மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளப்பட்டார்கள் என்பதுடன் அதனூடாக மேற்படி சமுதாயத்தினரை வலுவூட்டுவதும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திரிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டம் ஐ இன் கீழ் கொழும்பு மாவட்டத்தில் கடுவளை பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து இனங்காணப்பட்ட இந்த வீடமைப்புத் தேவையைக் கொண்ட 255 பயனாளிகளுக்கு ரூ.மி. 52.00 ஆன வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் (2012ஆம் ஆண்டில் 40 மில்லியன் ரூபா மற்றும் 2013ஆம் ஆண்டில் 12 மில்லியன் ரூபா என்ற வகையில் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் கிடைத்துள்ளன) கிடைத்துள்ளன.

2012ஆம் அண்டின் வருடாந்த பணவிக்கம் 7.53%மாகும் என்பதுடன் (இலங்கை மத்திய வங்கி அறிக்கை – 2012) மற்றும் நிர்வாகச் செலவினங்களையும் கவனத்தில் கொண்டு 10%மான நிவாரண வருடாந்த வட்டி விகிதம் அறவிடப்பட்டது. குறைந்து செல்லும் நிலுவை முறையின் கீழ் வீடமைப்புக்கடன் தவணைப்பணம் கணிப்பிடப்பட்டுள்ளது.

திரிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான பயனாளிகளை தெரிவுசெய்யும் போது பின்வரும் தகவு திறன்கள் பயன்படுத்திக்கொள்ளப்பட்டன. பின்வரும் மூன்று தகவு திறன்களைப் பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரர்கள், பயனாளிகளை இனங்காண்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

- நகர்ப்புறபிரதேசமென்றில் நிர்மாணிப்பதற்கான காணி உரித்தைக் கொண்டிருத்தல்
- வேறு வீட்டு ஆதன உரிமை இல்லாமை
- முறையான நிதி நிறுவனமொன்றிடமிருந்து வீடமைப்பு அபிவிருத்திக்கு கடன் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் இல்லாமை

இரண்டு பிணை தாரர்கள் வீடமைப்புக் கடனுக்கு பிணையாக இருத்தல் வேண்டுமென்பதுடன் காணியின் சட்டபூர்வமான உரிமை தமக்கு உரித்தாகின்ற சந்தர்ப்பத்தில் காணியில் வீட்டை நிர்மாணிக்கும் பணிக்கு இந்த வீடமைப்புக்கடன் வழங்கப்படுகின்றது.

## ஜனசெவன திரிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் - முதலாம் கட்டம்

| | |
|---|---|
| அமுல்படுத்தப்பட்டுள்ள நகர வலயம் | கொழும்பு மாவட்டத்தின் கடுவளை மாநகர சபை அதிகாரப் பிரதேசம் |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 255 |
| உச்ச கடன் தொகை | ரூபா 300,0000.00 |
| கடனை திருப்பிச் செலுத்தும் காலஎல்லை | 03-10 வருடங்கள் |
| முதற்கட்டத்திற்கான மொத்த நிதிசார் பொறுப்பு | ரூபா மில்லியன் 52.00 |
| 2013 டிசெம்பர் 31ஆந் திகதிக்கான பௌதீக முன்னேற்றம் | 100ூ |

### ஜனசெவன திரிய நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் - இரண்டாம் கட்டம்

| | |
|---|---|
| அமுல்படுத்தப்பட்டுள்ள நகர வலயம் | கொழும்பு மாவட்டம் |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 260 |
| உச்ச கடன் தொகை | ரூபா 200,000.00 |
| கடனை திருப்பிச் செலுத்தும் காலஎல்லை | 03-10 வருடங்கள் |
| இரண்டாம் கட்டத்திற்கான மொத்த நிதிசார் பொறுப்பு | ரூபா மில்லியன் 50.00 |
| 2014 டிசெம்பர் 31ஆந் திகதிக்கான பௌதீக முன்னேற்றம் | 42ஸ |

### சீத்தாவக்கபுர வீடமைப்புக் கருத்திட்டம்

சீத்தாவக்கபுர நகர சபைக்கு உரித்தான 80 ஏக்கர் நிலப் பரப்பில் 'வெவேகெலே' எனும் குடியிருப்பில் குறைந்த வசிகளுடன் வாழ்ந்து வருகின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற 45 குடும்பங்களுக்கு வீடமைப்புத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், சீத்தாவக்கபுரு வீடமைப்புக் கருத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.





சீத்தாவக்கபுர நகரின் மத்தியில் வெவேகெலே குடியிருப்பிலுள்ள குறைந்த

**கருத்திட்டத்தின் பணிகளை அங்குரார்ப்பணம் செய்யும் வகையில் அடிக்கல் நாட்டுகையில்**



ரூ.மி. 34.20 ஆன மொத்த மதிப்பீட்டுச் செலவினத்துடன் 2014 டிசம்பர் 09 ஆம் திகதி நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் கௌரவ விமல் வீரவன்ச அவர்களின் தலைமையில் இந்த வீடமைப்புக் கருத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இதன் முன்னேற்றம் 10ஸ ஆகும்.

## திருகோணமலை சமுத்திரகம வீடமைப்புக் கருத்திட்டம்

திருகோணமலை நகரத்தை நிலையான நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு மேற்படி நகரத்தின் மத்தியில் முறையற்ற விதத்தில் பரந்துள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட குடிசைகளை முறையாக அபிவிருத்தி செய்து சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக இனங்காணப்பட்டுள்ளது.




**திருகோணமலை பட்டினமும், சூழலும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் மனையாவேலி கிராம அலுவலர் பிரதேசத்தின் சமுத்திரகம கிராமத்திலுள்ள குடியிருப்பின் சமுாயத்தினரின் குறைந்த வசதிகளைக் கொண்ட கூ தற்காலிக வீடுகள்**

திருகோணமலை நகரத்தின் மத்தியில் 35 வருடங்களுக்கும் மேலாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சுமார் 125 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இங்குள்ள பெரும்பாலான சமுதாயத்தினரின் வீடுகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளும் இல்லை என்பதுடன், இந்த முறையற்ற குடிசை வீடுகள் நகரத்தின் அழங்காரத்திற்கும், வனப்புக்கும் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் மீனவர்களின் வீடுகளை பிரிக்க முடியாது என்பதுடன் அவை ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்துள்ளதன் காரணமாக, மேற்படி சமுதாயத்தினரை நகரத்தின் வேறு பிரதேசமொன்றில் மீள்வீடமைப்புமயமாக்குவது பொருத்தமற்றது. அதற்கமைய இந்த சமுதாயத்தினா் தற்போது வசித்து வருகின்ற பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் 96 வீட்டு அலகுகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டமொன்றில் இவா்கள் குடியமா்த்தப்படவுள்ளனா். இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் மூலம் விடுவிக்கப்படுகின்ற நிலப் பிரதேசமானது, கரையோரப் பூங்காவாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.



**jpUNfhzkiy rKj;jpufk tPlikg;Gf; fUj;jpl;lj;jpd; gadhspfis ,dq;fhZk; r%f – nghUshjhu Ma;it elhj;jy;**

ரூ.மி. 365.98 ஆன மொத்த மதிப்பீட்டுச் செலவினதுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் 2014 டிசம்பா் 31 ஆம் திகதிக்கு இதன் முன்னேற்றம் 05ஸ ஆகும்.

## “சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பணியொன்றாக குறைந்த வசதிகளைக் கொண்டுள்ள நகரக் குடியிருப்புகளில் வாழும் சமுதாயத்தினரின் சமூக, பொருளாதார, கலாசார அபிவிருத்திக்காக அச்சமுதாயத்தை வலுவூட்டல் மற்றும் மேற்படி சமுதாயத்திலுள்ள சிறுவா்கள், இளைஞா்கள், யுவதிகளின் அறிவு, ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்கு ரீதியாகவும் சாதகமான பிரவேசத்தில் ஈடுபடுத்தும் பொருட்டு மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்தை நகரக் குடியிருப்பு மட்டத்தில் அமுல்படுத்தும் பொறுப்பு இந்த அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை நிறைவேற்றும் பொருட்டு “சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2011ஆம் ஆண்டு முதல் பின்வரும் துறைகளின் ஊடாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

- சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை வலுவூட்டி சமுதாயத்தை வலுவூட்டல்.
- குடியிருப்பு மட்டத்தில் சமுதாய அபிவிருத்திச் சங்கங்களைத் தாபித்தல்.
- குடியிருப்புக்களை மையமாகக் கொண்டு சமுதாய செயற்றிட்டங்களைத் தயார் செய்வதும், அமுல்படுத்துவதும்.
- நகரக் குறைந்த வருமானம் பெறுகின்றவர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுகின்ற நுண்நிதிக் கடன் மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களை மேம்படுத்தும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- சமுதாய தொழில்முயற்சிசார் அபிவிருத்தி ஆற்றல்களை வளர்ப்பதற்கான உரிய தொழில்சார் நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்வதும், உதவிகளைப் பெற்றுக் கொள்வதும்.
- நகர்ப்புற இளைஞர்களின் விளையாட்டு ஆற்றல்களை வளர்ப்பதற்கான விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கு செய்தல்.
- நகர்ப்புற சிறுவர்களின் கலை ஆற்றல்களை மேம்படுத்தவதற்கான நாடகம், சித்திரம், கட்டுரை போட்டிகளில் ஈடுபடுத்தல்.
- சமுதாயநிர்மாணிப்பு, சிரமதானத் திட்டங்கள் மற்றும் சுற்றாடல், சுகாதார மேம்பாடுகள்.
- பயிற்றப்பட்ட ஊழியர்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவைக் கொண்ட ஊழியப் படையணிக்காக தொழில்சார் பயிற்சிப் பாடநெறிகளில் இளைஞர், யுவதிகளை ஈடுபடுத்தல்.

2014 ஆம் ஆண்டில் இதன் கீழ் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

## சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள

### சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி சமுதாயத்தை அறிவுறுத்தல் மற்றும் ஆரம்ப வீட்டு ஆய்வு நடவடிக்கைகள்

- கொழும்பு நகர்ப்புறப் பிரதேசத்தில் புதிய குடியிருப்புக்களில் சமூக – பொருளாதார ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி குடும்பங்களை அறிவுறுத்தல் மற்றும் சுயசக்தி குடும்பங்களை பதிவுசெய்தல் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வது புதிய குடியிருப்புக்களில் தொடர்ந்தும் 2014ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன்போது சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றி குடியிருப்புகளில் உள்ள சமுதாயத்தை அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய 2014ஆம் ஆண்டு கொழும்பு நகரத்தில் உள்ள 04 வலயங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 83 குடியிருப்புகளைச் சேர்ந்த 2536 குடும்பங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டம் பற்றி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகர வலயத்திற்கு வெளியே திருகோணமலை சமுத்திரகம மீனவர் வீடுகள், மொரட்டுவை – அங்குலான, அவிசாவளை – சீதாவக்கபுர போன்ற பிரதேசங்கள் உள்ளடங்களாக 1000 குடும்பங்களின் சமூக – பொருளாதார ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.







## சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை வலுவூட்டல்

“சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், குடியிருப்புகளில் பிரவேசித்து பலம்மிக்க சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்படுத்திக் கொள்ளல் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் செயலிழந்துள்ள குடியிருப்புக்களில் சுயசக்தி சமுதாய அபிவிருத்தி சங்கங்களை கட்டியெழுப்புவதன் மூலம் பலம்மிக்க சமுதாய அமைப்புக்கட்டமைப்பொன்றை குடியிருப்புகளில் தாபிப்பது இதன்மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. 2014ஆம் ஆண்டிலும் புதிய சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை சம்பந்தப்படுத்திக் கொண்டு கொழும்பு நகரத்தில் சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்த முடிந்தது.

அநுராதபுரம் - துருஇத்துருகம வீடமைப்புக் கருத்திட்டத்தின் 100 குடும்பங்களின் பங்கேற்புடன் சுயசக்தி சமுதாய அடிப்படையிலான அமைப்புத் தாபிக்கப்பட்டது.








**சமுதாய செயற்பாட்டாளர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களை பாராட்டல்**

சுயசக்தி மனிதக் குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் முனைப்புடன் இணைந்து செயற்பட்டு வருகின்ற சமுதாயத் தலைவர்களை பாராட்டும் வைபவமொன்று கொழும்பு மருதானை ரவர் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சமுதாயத் தலைவர்கள் 700 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றார்கள் என்பதுடன், அவர்களை பாராட்டி கௌரவிக்கும் வகையில் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

**சிறுவர்களின் திறமை, மனப்பாங்கு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்**

நகரக் குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை விருத்தி செய்யும் நோக்கத்துடன் சுயசக்தி சிறுவர் கழகங்களை கட்டியெழுப்பி சிறுவர் நிகழ்ச்சித்திட்டங்களை குடியிருப்புகளில் அமுல்படுத்தல் மற்றும் பல்வேறு சிறுவர் பொட்டிகள், அழகியற் கலை திறமைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், மரம் நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள், சேமித்தல் மற்றும் சமய நிகழ்ச்சித்திட்டங்கள், சிறுவர் நூலகங்களை ஆரம்பித்து குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களை ஒவ்வொரு துறையிலும் அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் இதன்மூலம் அமுல்படுத்தப்படுகின்றன.

2014ஆம் ஆண்டில் நகரக் குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களுக்காக தாபிக்கப்பட்ட சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை 50 ஆகும். ‘சுயசக்தி’ சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டம் பற்றி 4 நகர வலயங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர்கள் அறிவுறுத்தப்பட்டு சுமார் 20,000 சிறுவர்கள் இதில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.





போதையற்ற நகரம் - போதைவஸ்து ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்

போதையற்ற சமூகம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அதன்மூலம் நாட்டுக்குத் தேவையான ஆரோக்கியமான மக்களை உருவாக்குவது நாட்டின் சமூக, கலாசார மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் உறுதுணையாக அமைகின்றது. குறிப்பாக நகா்ப்புற குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் உள்ள சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை இந்த போதைவஸ்திலிருந்து விடுவித்துக்கொள்ளத் தேவையான போதைவஸ்து ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், அரசாங்க நிறுவனங்கள், தொண்டர் அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து அமுல்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.

குறிப்பாக இந்த நிகழ்ச்சித்திட்டம் புகையிலை மற்றும் மதுபானம் பற்றிய தேசிய அதிகாரசபையுடன் இணைந்து 2011ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.இந்நிறுவனத்துடன் இணைந்து 2014ஆம் ஆண்டிலும் நகா்புற குடியிருப்புக்களை மையமாகக் கொண்டு பல்வேற அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.





**சேமிப்பு மற்றும் நுண் நிதிக் கடன் நிகழ்ச்சித்திட்டம்**

நகர குடியிருப்பு மட்டத்தில் தற்போது சிறியளவிலான சுயதொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள பயனாளிகள் பற்றிய ஆரம்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு நகரத்தின் 4 வலயங்களையும் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய வகையில் அவ்வாறான பயனாளிகள் 34 பேர் பற்றிய சாத்தியவள ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இங்கு விசேடமாக குடியிருப்பு மட்டத்தில் உணவு உற்பத்தி, சிறிய தொழில் முயற்சிகள் வேறு சேவைகள் மற்றும் சிறியளவிலான உற்பத்திகளை மேம்படுத்திக்கொள்ளத் தேவையான கடன் வசதிகள் மற்றும் முறையான பயிற்றுவித்தல்கள் மேற்படி பயனாளிகளினால் கோரப்பட்டன.

அதிகாரசபையின் தலையீட்டுடன் மேற்படி பயனாளிகள் குழுக்களாக உருவாக்கப்பட்டு சேமிப்பை முதலில் தூண்டி அவர்கள் தற்போது நடாத்திச் செல்கின்ற சுயதொழில் வாய்ப்புக்களை வலுவூட்டத் தேவையான அறிவைப் பெற்றுக்கொடுத்தல், தொழில் முயற்சிகளை மேம்படுத்தத் தேவையான கடன் வசதிகளின் தேவைகள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. சிறியளவில் ரூபா 5000 முதல் ரூபா 15000 வரை தொழில் முயற்சிகளை மேம்படுத்திக் கொள்வதற்காக 34

பயனாளிகளுக்கு கடன் வசதிகள் இந்த ஆண்டில் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இந்த நுண் நிதி கடன் நிகழ்ச்சித்திட்டத்தில் கடனை திருப்பிச் செலுத்தும் காலம் ஒரு வருடமாகும். வட்டி வீதம் 9 சதவீதமாகும்.

**<u>தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்</u>**

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் விருத்தி அமைச்சின் கீழ் உள்ள கொழும்பு மாவட்ட சிறிய தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவுடன் இணைந்து சிறிய தொழில்முயற்சிகளை மேம்படுத்தும் செயலமர்வுகள் நகர்ப்புற வலயத்தை உள்ளடக்கும் வகையில் நகர்ப்புற சுயதொழில்வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள 250 இற்கும் மேற்பட்டவர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டன.
தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுவது தொடர்பிலான சரியான அறிவை மிகவும் சரளமாகப் பெற்றுக் கொடுத்து அரச அனுசரணையின் கீழ் தொழில்வாய்ப்புக்களை முறையாக வளர்த்துக் கொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பு இதன் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.




**<u>தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தையல்இயந்திரங்களை அன்பளிப்புச் செய்தல்</u>**

நகர்ப்புற குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் சுயதொழில்வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு தையல் இயந்திரங்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் நிர்மாணிப்பு, இயந்திரசாதன பயிற்றுவித்தல் நிலையத்தில் நடைபெற்றது. சுயதொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களை ஊக்குவித்தல், சுயதொழில்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் பெண்கள் 75 பேருக்கு இவ்வாறு தையல் இயந்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டன.




**அழகியற்கலை பயிற்சிப் பாடநெறியை நடாத்தியமை**





நகர்ப்புற இளம் சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி அறிவு, திறமை மற்றும் மனப்பாங்குசார் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக சமுதாயத்தின் தீவிர கோரிக்கையின் பிரகாரம் கட்டணம் அறவிடாது குடியிருப்பு மட்டத்தில் அழகியற்கலை பாடநெறி நடாத்தப்பட்டது.

தொழில் பயிற்சி அதிகார சபையின் அழகியற்கலை போதனாசிரியரினால் வழிநடாத்தப்பட்ட இந்த அழகியற்கலை பாடநெறியானது சுமார் 40 யுவதிகளின் பங்கேற்புடன் கொழும்பு வடக்கு மற்றும் கொழும்பு மத்தி நகர வலயங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் மட்டக்குளி ஸ்ரீ விக்ரமபுர சமுதாய மண்டபம் மற்றும் பொரளை நகர வலயத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பொரளை சஹஸ்புர சமுதாய மண்டபத்திலும் நடாத்தப்பட்டது.

**அழகியற்கலை பயிற்சிப் பாடநெறியை பூர்த்தி செய்த யுவதிகளுக்கு சான்றிதழ்களை வழங்கிவைத்தல்**

அழகியற்கலைப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த யுவதிகளுக்கு நிர்மாண, இயந்திரசாதன மற்றும் பயிற்சி நிலையத்தில் சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.





**உலக மகளிர் தினத்தைக் கொண்டாடுதல்**

2014 உலக மகளிர் தினத்தை கொண்டாடும் வகையில் நகர்ப்புற குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளைச் சேர்ந்த பெண்கள் ஆயிரத்துக்கும் அதிகமானவர்களின் பங்கேற்புடன் பெண்களுக்கான கிறிக்கெட் போட்டி, மணமகள் கண்காட்சி, உணவு சமைக்கும் நிகழ்ச்சி, விலங்குகளுக்கான கண்காட்சி கூடம்,சிறுவர் மற்றும் மகளிர் பணியத்தின் அறிவுறுத்தல்

நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பிலான பெண்களின் மாநாடு பத்தரமுல்லை ஜனகலா நிலையத்தில் நடைபெற்றது.

இதற்கமைவாக 2014 உலக மகளிர் தின நிகழ்ச்சித்திட்டம் இம்முறை நவகம்புர சமுதாய மண்டபத்திலும் நடைபெற்றது. அழகியற்கலை பாடநெறியை வெற்றிகரமாக பயின்ற யுவதிகள் 20 பேர் தாம் பெற்றுக் கொண்ட அறிவைப் பயன்படுத்தி அவர்களின் சுயஆக்கமாக 2014 உலக பெண்கள் தின நிகழ்ச்சித்திட்டத்திற்கு மணமகள் கண்காட்சியொன்றை நடாத்தினார்கள். சுயதொழில்களில் ஈடுபட்டுள்வர்களை ஊக்குவிக்கும் வகையில் சந்தைப்படுத்தல் விற்பனைக் கூடங்களை நிர்மாணித்து தமது உற்பத்திகளை விற்பனை செய்யும் வாய்ப்பும் உருவாக்கிக் கொடுக்கப்பட்டது.






**<u>சமுதாய பங்கேற்பு துப்பரவேற்பாட்டு பௌதீக கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டம்</u>**

நகர்ப்புற குடியிருப்புகளை மையமாகக் கொண்டு அத்தியாவசியமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய பொது வசதிகளை அபிவிருத்தி செய்துகொடுத்தல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். இந்த சமுதாத்தினருக்கான முறையான வீடமைப்பு வசதிகளை பெற்றுக்கொடுக்கும் வரை இந்தக் குடியிருப்புகளில் பொதுவாக காணப்படுகின்ற மலசலகூட வசதிகள், மலசல கழிவகற்றும் கட்டமைப்பு, கழிவுநீர் அகற்றும் கட்டமைப்பு, சமுதாய மண்டபம், விளையாட்டு மைதானம், ஓய்வு நிலையம் மற்றும் நூலகங்களை அபிவிருத்தி செய்வது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. 2014ஆம் ஆண்டில் 54 கருத்திட்டங்கள் நிர்மாணிப்பதற்கு என இனங்காணப்பட்டுள்ளன.









**<u>சமுதாய சங்கங்களுக்கு பொருட்களும், உபகரணங்களும் வழங்கிவைத்தல்</u>**

குறைந்த வசதிகளைக் கொண்ட நகர்ப்புற குடியிருப்புக்களில் இயங்கி வருகின்ற சமுதாயச் சங்கங்களுக்கு கதிரை, கபட் போன்ற உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு நிர்மாண, இயந்திரசாதன மற்றும் பயிற்றுவித்தல் நிலையத்தில் இடம்பெற்றது.





**<u>சிரமதான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்</u>**





தமது வீட்டுச் சுற்றுப்புறச் சூழலையும் குடியிருப்பையும் சுத்தமாக வைத்திருப்பதற்கு சமுதாயத்தைத் தூண்டும் நோக்கத்துடன் சிரமதான நிகழ்ச்சித்திட்டங்களை குடியிருப்பு மட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. சமுதாயத்தின் பங்கேற்புடன், பொது இடங்கள், வடிகால்கள் போன்ற இடங்களைச் சுத்தம் செய்வதும், சமுதாயத்தை சுத்தமான சூழலில் வாழப் பழக்குவதும் இதன் மூலம் இடம்பெறுகின்றது.

**<u>கிராண்ட்பாஸ் ஸ்ரேஸ்புர விளையாட்டு மைதானத்தை புதுப்பித்து திறந்துவைத்தமை</u>**





2014 உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு ஸ்ரேஸ்புர விளையாட்டு மைதானத்தில் பகல் இரவுப் போட்டிகளை நடாத்தக்கூடியவாறு மின்சார வசதிகள் மற்றும் ஏனைய மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு திறந்துவைக்கப்பட்டது. திறந்துவைக்கும் வைபவத்தின் போது 10 உதைபந்தாட்ட அணிகளின் பங்கேற்புடன் கண்காட்சிப் போட்டியொன்றும் நடைபெற்றது.

## உலகக் குடியிருப்பு தின கொண்டாட்டம் - 2014

2014 ஆம் ஆண்டின் உலகக் குடியிருப்புத் தினத்தை நோக்காகக் கொண்டு "கொழும்புச் சிறுவர்கள்" எனும் தொனிப்பொருளின் கீழ் சிறுவர் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் அங்குரார்ப்பண வைபவம் 2014 பெப்ருவரி மாதம் 22 ஆம் திகதி அழகியற்கலை பல்கலைக் கழகத்துடன் இணைந்து பெலவத்தை "அபேகம" (ஜனகலா கேந்திரய) இல் சிறுவர்கள் 2500 பேரின் பங்கேற்புடன் நடைபெற்றது.
இதன் போது கொழும்பு நகர வலயம் மற்றும் அண்மித்த நகர வலயங்களைச் சேர்ந்த குறைந்த வசதிகளைக் கொண்ட சிறுவர்களின் அழகியற்கலைத் திறமைகளை மேம்படுத்துவதற்காக அழகியற்கலை பல்கலைக் கழகத்தின் கல்விமான்களின் பங்கேற்புடன் குடியிருப்புக்களின் பிள்ளைகளுக்கு பாடல், நடனம், மூர்த்திக் கலை போன்ற துறைகள் பற்றிய அடிப்படை அறிவு வழங்கப்பட்டது.





**<u>குடியிருப்புத் தினத்தை இலக்காகக் கொண்டு சிறுவர் சித்திரம், பாடல், நடனப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்</u>**

சித்திரம், பாடல் மற்றும் நடனப் போட்டிகளில் பங்கேற்கின்ற சகல குடியிருப்புச் சிறுவர்களையும் சம்பந்தப்படுத்திக் கொண்டு ஏப்ரல் மாதம் முதல் தொடர்ச்சியாக அழகியற்கலை பல்கலைக் கழகத்தின் கற்புல பீடத்தின் விரிவுரையாளர்கள் மற்றும் கல்விமான்களின் பங்களிப்புடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நகர்ப்புறக் குடியிருப்புக்களின் பொது இடங்களில் நடாத்தப்பட்டன.

**<u>கலாசார நிகழ்ச்சிகளுக்கான முன் பயிற்சிகள்</u>**





தாமரைத் தடாகம் சர்வதேச அரங்கில் நடைபெற்ற கலாசார நிகழ்ச்சிக்கான முன் பயிற்சி நடவடிக்கைகள் சிறுவர்கள் 500 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு, அழகியற்கலை பல்கலைக் கழகத்தின் வளவாளர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்வின் போது சிறுவர்களுக்கு உரித்தான திறமைகள் மற்றும் ஆற்றல்களை வெளிக்கொண்டுவர முடிந்தது.






**<u>“கொழும்புச் சிறுவர்கள்” சிறுவர் கலாசார நிகழ்ச்சி</u>**

2014 அக்டோபர் மாதம் 04 ஆம் திகதி குடியிருப்புக்களை சேர்ந்த சுமார் 700 பிள்ளைகளின் பங்கேற்புடன் சிறுவர் கலாசார நிகழ்ச்சியொன்று தாமரைத்தடாகத்தில் நடாத்தப்பட்டது. இதில் பல்வேறு ஆக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், முன்பயிற்சி நடவடிக்கைகள் பிரபலங்களின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

திரு அமித்த வீரசிங்க இதன் நிகழ்ச்சிநிரல் மற்றும் இயக்கத்தை மேற்கொண்டார் என்பதுடன், திரு நவரத்ன கமகே இசையாக்கம், கதை திரு வசந்த விட்டச்சி, அழங்காரம் திருமதி சுவினீதா பெரேரா மற்றும் செல்வி அமா விஜேசேகர போன்ற பிரபல்யங்களை உள்ளடக்கிய குழுவினால் மேற்கொள்ளப்பட்டன.

சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்டுள்ள ஒட்டுமொத்த சிறுவர்களிலிருந்த தெரிவுசெய்யப்பட்ட பாடல், நடனம், நாடகம் மற்றும் சித்திர ஆக்கத் துறையில் திறமைமிக்க சிறுவர்களைத் தொடர்புபடுத்திக் கொண்டு பயிற்சியளிக்கும் நடவடிக்கைகள் அழகியற்கலை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விமான்கள் மற்றும் கலைத் துறையைச் சேர்ந்த பிரபலங்களின் ஆலோசனைக்கு அமைய மேற்கொள்ளப்பட்டன.









# உலகக் குடியிருப்பு தின கொண்டாட்டம் - 2014

உலக குடியிருப்பு தினத்தைக் கொண்டாடுவதானது நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சட்டத்தினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய உலக குடியிருப்பு தினம் இலங்கையில் கொண்டாடப்படுவது தொடர்பான முக்கிய செயற்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு எமது அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குடியிருப்பு மட்டத்தில் நடைபெற்ற சித்திர, நாடக, கிரிக்கட் போட்டிகளில் வெற்றியீட்டிய பிள்ளைகளுக்கு விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு 2014 அக்டோபர் மாதம் 06 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற குடியிருப்புத் தின தேசிய நிகழ்வின் போது இடம்பெற்றது.





**<u>நகரக் குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களுக்கான சிறுவர் சித்திரப் போட்டி</u>**

நகரக் குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களின் ஆக்கபூர்வமான ஆற்றல்கள் மற்றும் கலைத்திறமைகளை வளர்க்கும் நோக்கத்துடன் 2014 ஆகஸ்ட் மாதம் முதல் வாரம் முதல் சித்திரப் பேர்டியானது குடியிருப்பு மட்டத்தில் நடாத்தப்பட்டதுடன், சமுதாய ஆர்வளர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் ஊடாக இந்தப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டது. கொழும்பு நகரின் குடியிருப்புகளில் உள்ள சிறுவர்கள் சுமார் 13000 பேரை ஒன்றிணைத்து 3 வயதுப்பிரிவின் கீழ் சிறுவர்களுக்கான சித்திரப்போட்டி உலக குடியிருப்பு தினத்தை நோக்கமாகக் கொண்டு நடாத்தப்பட்டது.





முதல் சுற்றில் சமர்ப்பிக்கப்பட்ட சிறுவர்களின் வெற்றிகரமான 5000 ஆக்கங்கள் தெரிவுசெய்யப்பட்டு நேரடியாக சித்திரங்களை வரையும் நிகழ்வு செப்டெம்பர் மாதம் 20ஆந் திகதி விஹாரமகாதேவி பூங்காவில் நடாத்தப்பட்டது.

**நகர்ப்புற குடியிருப்புகளைச் சேர்ந்த சிறுவர்களின் சித்திரப் போட்டி - இறுதிச் சுற்று**

2014“09“20 ஆம் திகதி விஹாரமகாதேவி பூங்காவில் நடாத்தப்பட்ட முதற்கட்டத்தின் போது தெரிவு செய்யப்பட்ட 5000 பேரின் பங்கேற்புடன் நேரடியாக சித்திரம் வரையும் போட்டி நடாத்தப்பட்டது. இதன் போது அழகியற்கலை பல்கலைக் கழகத்தின் கல்விமான்கள் 50 பேர் எமது ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு இதில் பங்கேற்றார்கள்.









## சுயசக்தி சிறுவர் சித்திரக் கண்காட்சி

இறுதிக் கட்டத்தின் சித்திர ஆக்கத்தில் பங்கேற்ற சிறுவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 600 சித்திரங்களைக் கொண்ட சித்திரக் கண்காட்சியொன்று 2014 அக்டோபர் மாதம் 01,02, மற்றும் 03 ஆகிய தினங்களில் கொழும்பு கலாபவனத்தில் நடாத்தப்பட்டது.வெற்றிபெற்ற சிறுவர்களுக்கு விருதுகள், சான்றிதழ்கள், பரிசுகள் மற்றும் பணப்பரிசுகளை வழங்குவதானது 2014 அக்டோபர் மாதம் 06 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற குடியிருப்புத் தின தேசிய வைபவத்தின் போது மேற்கொள்ளப்பட்டது.









**<u>நகரக் குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கான சிறுவர் குறுந்நாடகப் போட்டி</u>**

நகர்ப்புற குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் அழகியற்கலைத் திறமைகளை வளர்ப்பதற்கு 2014 உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நகரக் குடியிருப்பை மையமாகக் கொண்ட பொருளாதார, சமூக, கலாசார, கல்விசார் மற்றும் வேறு தீர்வுகளைக் கண்டறிவதை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் சிறுவர் நாடகப்போட்டி ஒன்று எமது அதிகார சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

நாடகப் போட்டியில் கலந்துகொண்ட சகல குழுக்களுக்கும் அழகியற்கலைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மற்றும் கல்விமான்களின் பங்கேற்புடன் யூலை மாதம் முதல் முன்பயிற்சி நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன.

இந்த நாடகப்போட்டியில் கொழும்பு நகரத்தை உள்ளடக்கும் வகையில் 63 நாடகங்கள் பங்கேற்றன. நாடகத்துறையைச் சேர்ந்த பிரபலமானவர்களைக் கொண்ட ஒரு நடுவர் குழுவின் மூலம் 27 நாடகங்கள் (மாணவர்கள் 400 பேர்) இரண்டாவது சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் குறித்த நாடகங்களை

மென்மேலும் ஆக்கபூர்வமாக தயார்செய்யும் நோக்கத்துடன் விசேட நாடக செயலமர்வொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது.

அவ்வாறு 2வது சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகங்கள் 2014 செப்தெம்பர் மாத் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் கொழும்பு கிறீன்பாத் புதிய நகர மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டன. மேற்படி நாடக விழாவில் வெற்றியீட்டிய நாடகங்கள் மற்றும் கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு 2014 ஒக்டோபர் மாதம் 06ஆந் திகதி சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற குடியிருப்புத் தின தேசிய விழாவின் போது இடம்பெற்றது.





## 2014 விளையாட்டு திறமைகளை மேம்படுத்தல் - அணிக்கு ஆறுபேர் கொண்ட மென்பந்து கிறிக்கட் சுற்றுப் போட்டி (ஆண் ∴ பெண்)

### முதற்சுற்று

கொழும்பு நகரத்தில் உள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் விளையாட்டு திறமைகளை வளர்க்கும் நோக்கத்துடன் மற்றும் 2014 உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நகர குடியிருப்பு அதிகாரசபை அணிக்கு 6 பேர் கொண்ட (பெண்கள் ∴ ஆண்கள்) மென்பந்து கிறிக்கட் போட்டி ஒன்றை ஒழுங்குசெய்தது.

இந்த போட்டியின் ஆரம்ப சுற்று 2014 ஆகஸ்ட் மாதம் 25,26,29 மற்றும் செப்தெம்பர் மாதம் 02 மற்றும் 10 ஆம் திகதிகளில் சாலிகா மைதானம், ஸ்ரீ விக்ரமபுர மைதானம் மற்றும் பேஸ்லையின் வீதி புகையிரத மைதானத்தில் நடைபெற்றதுடன், 150 அணிகள் (இளைஞர், யுவதிகள் 1200 பேர்) கலந்து கொண்டார்கள்.





**<u>2014 விளையாட்டு திறமைகளை மேம்படுத்தல் - அணிக்கு ஆறுபேர் கொண்ட மென்பந்து கிறிக்கட் சுற்றுப் போட்டி (ஆண் ∴ பெண்)</u>**

**<u>இறுதிச் சுற்று</u>**

முதற்சுற்றில் தெரிவு செய்யப்பட்ட வெற்றியீட்டிய 20 அணிகள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) 2014 செப்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி ராஜகிரிய பண்டாரநாயக்கபுரு மைதானத்தில் போட்டியிட்டதுடன், வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு 2014 ஒக்டோபர் மாதம் 06ஆந் திகதி சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற குடியிருப்புத் தின தேசிய விழாவின் போது இடம்பெற்றது.












## வீதி உணவு விழா பற்றி முன்அறிவுறுத்தல




வட கொழும்பு, மத்திய கொழும்பு, கொழும்பு கிழக்கு, கொழும்பு மேற்கு மற்றும் பொரளை ஆகிய வலயங்களை உள்ளடக்கும் வகையில் சமுதாய செயற்பாட்டாளர்கள் 26 பேரின் தலைமையில் வீதி உணவு உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டுள்ள சுமார் 400 பேர் “கொழும்பு வீதி உணவு உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர் சங்கத்தின்” கீழ் ஒன்றுதிரட்டப்பட்டார்கள் என்பதுடன், நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலர்கள், சமுதாயத் தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் பங்கேற்புடன் வீதி உணவு உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குசெய்வது தொடர்பாக 2014.10.31 ஆம் திகதி பொரளை மெகசின் சமுதாய மண்டபத்தில் ஆரம்ப கலந்துரையாடல் நடைபெற்றதுடன், 04 வலயங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இது பற்றி அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நகரக் குடியிருப்புகளில் உணவு உற்பத்தி செய்கின்ற சிறிய அளவிலான சுயதொழில்வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கான ஒழுங்கு செய்யப்பட்ட வீதி உணவு விழா அக்டோபர் மாதம் 01,02 மற்றும் 03 ஆகிய தினங்களில் கிறீன்பாத்தில் நடைபெற்றது.







## கேஸ் சிலின்டர் மற்றும் கேஸ் அடுப்புகளை வழங்கிவைத்தல





உணவுகளைச் சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்கள் 135 பேருக்கு கேஸ் சிலின்டர் மற்றும் கேஸ் அடுப்புக்களை அன்பளிப்புச் செய்யும் வைபவம் 2014 அக்டோபர் மாதம் 01 ஆம் திகதிய விஹார மகா தேவி பூங்காவின் திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது. வீதி உணவுகளை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள சுயதொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்து, அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு இது ஒழுங்கு செய்யப்பட்டது.

# நகரக் குடியிருப்பு அதிகார சபையின்

# 2014.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான

# நிதிக் கூற்றுக்கள்

1) நிதி நிலைமைக் கூற்று
2) வருமான, செலவினக் கணக்கு
3) காசுப் பாய்ச்சல் கூற்று
4) உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று

**நகர குடியிரப்பு அபிவிருத்தி அதிகாரசபையின்**

2014 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு

நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **<u>நடைமுறைச் சொத்துக்கள்</u>** | | | |
| காசும் வங்கி மீதியும் | **01** | 81,041,114.83 | 93,992,917.10 |
| இருப்பு வள நிலையங்களுக்கு | **02** | 11,441,401.85 | |
| முற்பணம் | **03** | 290,404.00 | 171,780.00 |
| ஊழியர் கடன் | | 7,466,185.85 | 8,294,237.96 |
| நலன்புரிக் கடன் | | 10,000.00 | - |
| ரீல் கம்பனி | | 12,100,000.00 | 13,103,674.00 |
| கிடைக்க வேண்டிவை | **04** | 16,741,364.25 | 6,235,456.34 |
| ஒப்பந்த முற்பணம் | **05** | 170,562,116.84 | 259,824,529.27 |
| | | **299,652,587.62** | **381,622,594.67** |
| **<u>நடைமுறையல்லா சொத்துக்கள்</u>** | | | |
| வீடமைப்புக் கடன் | **06** | 124,192,218.57 | 38,155,965.87 |
| பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்கள் | **07** | 1,775,592,625.62 | 1,073,530,511.93 |
| ஆதனம், பொறியும், உபகரணமும் | **08** | 12,970,151.34 | 15,210,611.60 |
| 48 ஆம் தோட்ட வீடமைப்புக் கருத்திட்டம் (14 வீடுகள்) | | 34,500,000.00 | - |
| துருஇதுருகம வீடமைப்புக் கருத்திட்டம் (8 வீடுகள்) | | 6,328,507.81 | 85,434,855.31 |
| | | **1,953,583,503.34** | **1,212,331,944.71** |
| **<u>மொத்த சொத்துக்கள்</u>** | | **2,253,236,090.95** | **1,593,954,539.37** |
| **<u>பொறுப்புக்கள்</u>** | | | |
| **<u>நடைமுறைப் பொறுப்பு</u>** | | | |
| நின்ற செலவினம் | **09** | 242,944,312.78 | 155,557,145.04 |
| முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதி | | 7,830,000.00 | - |
| தடுத்து வைக்கப்பட்ட நிதி | **10** | 44,179,170.33 | 43,774,968.40 |
| வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | **11** | 2,959,364.16 | |
| அங்குலான வாடகை முற்பணம் | | 8,250,000.00 | |

| | | | |
|---|---|---|---|
| | | **306,162,847.27** | **199,332,113.44** |
| **நடைமுறையல்லா பொறுப்பு** | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கம் | | 5,738,637.50 | 4,605,240.63 |
| | | **5,738,637.50** | **4,605,240.63** |
| மொத்த பொறுப்புக்கள் | | **311,901,484.77** | **203,937,354.07** |
| தேறிய சொத்துக்கள் | | **1,941,334,606.19** | **1,390,017,185.30** |
| உரிமையாண்மையும், சேர்மமும் | | | |
| திறைசேரிக் கொடை | **12** | 1,878,411,960.70 | 1,408,558,466.22 |
| வருமான சேர்மம் | | 93,094,358.50 | |
| | | **1,971,506,319.20** | 1,408,558,466.22 |
| திரண்ட நிதி | | (19,887,113.92) | (24,574,155.13) |
| ஆண்டின் குறை | | (10,284,599.09) | 6,032,874.21 |
| | | **(30,171,713.01)** | **(18,541,280.92)** |
| மொத்த உரிமையாண்மை | | **1,941,334,606.19** | **1,390,017,185.30** |
| | | | |

பக்க இலக்கம் 03 மற்றும் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 09 முதல் 11 வரையான குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் முக்கிய அம்சமொன்றாகும். இறுதி நிதிக்கூற்றுக்களை தயார்செய்தல் மற்றும் சமர்ப்பிப்பது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவக் குழுவின் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுக்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அவர்கள் சார்பாக கீழே கைஒப்பமிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ……………………. | ……………………. | ………………….. |
| பணிப்பாளர் (நிதி) | பணிப்பாளர் நாயகம் | தவிசாளர் |
| நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை | நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை | நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை |

**நகர குடியிரப்பு அபிவிருத்தி அதிகார சபையின்**

2014 டிசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான

வருமான, செலவினக் கணக்கு

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வீடமைப்பு அமைச்சு | | 49,136,399.70 | 28,240,483.90 |
| திறைசேரிக் கொடை | | 67,000,000.00 | 55,158,000.00 |
| வட்டி வருமானம் | **13** | 8,287,240.82 | 6,928,216.76 |
| வேறு வருமானங்கள் | **14** | 1,677,350.82 | 829,382.67 |
| அங்குலான வருமானம் | | - | 9,900,000.00 |
| 187 ஆம் தோட்டம் | | - | 200,000.00 |
| சமுதாய அமைப்புக்கள் | | - | 3,741,000.00 |
| மொத்த வருமானம் | | **126,100,991.34** | **104,997,083.33** |
| **செலவினம்** | | | |
| நிர்வாகச் செலவினம் | | | |
| சம்பளம் | | 33,652,379.26 | 29,843,026.80 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | | 2,749,329.60 | 1,783,320.52 |
| பிற செலவினங்கள் | | 2,889,803.52 | 1,612,177.00 |
| மிகைஊதியம் | | 1,335,000.00 | 1,150,000.00 |
| பணிப்பாளர் சபைக் கொடுப்பனவு | | 897,460.00 | 974,000.41 |
| பிரயாணச் செலவினம் | | 629,771.00 | 321,717.00 |
| வெளிநாட்டுப் பிரயாணச் செலவினம் | | 2,211,339.47 | 2,327,781.31 |
| எழுதுகருவிகள் | | 2,310,209.87 | 1,246,239.37 |
| எரிபொருள் | | 2,290,876.10 | 1,961,315.69 |
| நலன்புரிச் செலவினம் | | 629,909.00 | 942,272.00 |
| பத்திரிகை | | 35,125.00 | 34,345.00 |
| முத்திரை | | 80,305.00 | 74,207.00 |
| வங்கிச் செலவினம் | | 15,000.00 | 15,375.00 |
| தொலைபேசிச் செலவினம் | | 1,441,799.26 | 835,944.70 |
| அலுவலக வாடகைச் செலவினம் | | 6,914,421.64 | 5,579,506.20 |
| புதுப்பித்தலும், பராமரிப்பும் (அலுவலக உபகரணம்) | | 471,299.21 | 384,686.40 |
| வாகனம் புதுப்பித்தலும், பராமரிப்பும் | | 2,087,204.23 | 2,967,173.41 |
| கட்டிடம் புதுப்பித்தலும், பராமரிப்பும் | | 352,476.50 | 12,499.30 |
| கட்டிடம் புனரமைப்பு | | 3,451,546.86 | |
| காப்புறுதிச் செலவினம் | | 471,781.70 | 513,211.40 |
| சுத்தம் செய்தல் | | 376,875.00 | 228,015.00 |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம் | | 493,850.00 | 461,833.34 |

| | | | |
|---|---|---|---|
| அச்சுச் செலவினம் | | 1,018,633.90 | 660,481.00 |
| நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு | | 38,167.00 | 73,385.00 |
| விளம்பரம் | | 244,093.00 | 349,260.80 |
| வேறு செலவினங்கள் - பொருட்கள் | | 26,924.00 | 166,654.69 |
| வேறு செலவினங்கள் - சேவைகள் | | 135,558.72 | 362,258.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 115,320.00 | - |
| ஊ.சே.நிதியம் | | 8,922,837.38 | 6,148,256.46 |
| ஊ.நம். நிதியம் | | 1,337,258.87 | 922,836.26 |
| பாதுகாப்புச் செலவினம் | | 289,000.00 | 310,553.00 |
| பணிக்கொடை | | 1,499,716.87 | 784,415.38 |
| மின்சாரச் செலவினம் | | 136,298.26 | 175,713.38 |
| நீர்ப் பட்டியல் | | 181,484.06 | 116,034.20 |
| உபசரணைச் செலவினம் | | 8,710.00 | - |
| மருத்துவச் செலவினம் | | 2,500.00 | - |
| தேசத்திற்கு மகுடம் | | 208,800.00 | - |
| விசிறி வீடமைப்புக் கடன் தவணையை சேகரிப்பதற்கான தரகு | | 143,690.70 | - |
| சட்டச் செலவினம் | | | 120,300.00 |
| திருகோணமலை நானாவித செலவினம் | | | 2,000.00 |
| கண்காட்சிச் செலவினம் | | | 946,321.00 |
| தளபாடம் பொருத்தல், பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் | | | 1,350.00 |
| தேய்மானம் | 08 | 2,389,984.05 | 6,515,240.59 |
| | | **82,486,739.03** | **70,923,706.61** |
| அபிவிருத்திச் செலவினம் | | | |
| சிங்ஹபுர வீடமைப்புக் கருத்திட்டம் | | 3,617,773.33 | 71,156.00 |
| சுயசக்தி சமுதாய சங்கங்களை நிர்மாணித்தல் | | 5,174,563.71 | 1,505,018.11 |
| சஹஸ்புர வீடமைப்புத்திட்டத்தின் புனரமைப்பு | | 343,750.00 | 4,515.69 |
| குடியிருப்புத் தினம் | | 24,074,474.18 | 6,494,553.00 |
| உற்சவ செலவினம் | | 14,000.00 | 4,828,670.06 |
| போக்குவரத்துச் செலவினம் | | 5,404,151.55 | 7,060,430.00 |
| சுயசக்தி மனித அபிவிருத்தி | | 15,261,553.63 | 5,931,036.67 |
| அநுராதபுரம் வீடமைப்புக் கருத்திட்டம் | | 8,585.00 | 2,145,122.98 |
| | | **53,898,851.40** | **28,040,502.51** |
| **மொத்த செலவினம்** | | **136,385,590.43** | **98,964,209.12** |
| **காலப்பகுதிக்கான குறை** | | **(10,284,599.09)** | **6,032,874.21** |

**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின்**

**20143 டிசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான**

**காசுப்பாய்ச்சல் கூற்று**

| | 2014 | 2013 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள்** | | |
| **பெறுகைகள்** | | |
| திறைசேரியின் கொடை (மீண்டெழும்) | 67,000,000.00 | 55,158,000.00 |
| வேறு வருமானம் | 951,470.00 | 2,828,948.90 |
| வட்டி வருமானம் | 2,219,950.61 | 2,177,927.52 |
| இடர் கடன் அறவீடு | 798,580.96 | |
| குத்தகை வாடகை | 315,000.00 | 220,000.00 |
| கேள்விக் கட்டணம் | | 51,000.00 |
| | 71,285,001.57 | 60,435,876.42 |
| **கொடுப்பனவு** | | |
| சம்பளமும் வேதனமும் | 52,666,392.31 | 51,049,779.49 |
| பிரயாணச் செலவினம் | 2,808,721.97 | 2,811,890.16 |
| சேவை செலவினம் | 4,923,098.65 | 3,029,485.98 |
| ஒப்பந்த சேவைகளுக்கான கொடுப்பனவு | 19,816,337.97 | 15,635,271.79 |
| பராமரிப்புச் செலவினம் | 7,042,858.38 | 3,935,255.18 |
| காசு முற்பணம் | 67,839.00 | |
| | 87,325,248.28 | 76,461,682.60 |
| | | |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(16,040,246.71)** | **(16,025,806.18)** |
| **முதலீட்டு நடவடிக்கைகள்** | | |
| **பெறுமைகைள்** | | |
| வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை -சகஸ்புர புனரமைப்பு | 31,141,388.49 | 13,761,693.79 |
| விசிறி வீடமைப்பு கடன் தவணை பெறுகை | 3,833,684.86 | 6,715,438.51 |
| கிடைத்த நிதி – ரீல் | 1,003,674.00 | |
| அங்குலான கருத்திட்டத்திற்கு நிதி பெறுகை | | 9,900,000.00 |
| அநுராதபுரம் கட்டுகெலியான வீடமைப்புக் கடன் தவணைப்பணம் | 246,000.00 | 437,051.00 |
| சுயசக்தி கடன் தவணை | 232,710.32 | 593,771.20 |

| | | |
|---|---|---|
| | 36,457,457.67 | 31,407,954.50 |
| **கொடுப்பனவுகள்** | | |
| அங்குலான வீடமைப்புக் கருத்திட்டம் | 241,357,521.01 | 321,335,244.02 |
| லுனாவ வீடமைப்புக் கருத்திட்டம் | 197,901,493.05 | 190,712,228.46 |
| தலவாக்கலை வீடமைப்புக் கருத்திட்டம் | 40,957,707.24 | 4,345,156.63 |
| சிலாபம் வீடமைப்புக் கருத்திட்டம் | 47,510,561.35 | 3,882,147.77 |
| சீதாவக்கபுர கருத்திட்டம் | 1,514,682.50 | - |
| திருகோணமலை கருத்திட்டம் | 738,354.49 | - |
| அநுராதபுரம் வீடமைப்புக் கருத்திட்டம் | | 8,217,791.57 |
| சகஸ்புர புனரமைப்பு | 28,525,774.33 | 13,763,923.79 |
| நிலையான சொத்து கொள்வனவு | 4,176,057.60 | 1,409,483.20 |
| மனித அபிவிருத்திச் செலவினம் | 47,584,974.09 | 15,753,155.61 |
| 48ஆம் தோட்டம் | 4,520,948.75 | 8,072,738.00 |
| விசிறி வீடமைப்புக் கடன் | 21,425,000.00 | 6,947,500.00 |
| | 636,213,074.41 | 574,439,369.05 |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | **(599,755,616.74)** | **(543,031,414.55)** |
| நிதி நடவடிக்கைகள் | | |
| திறைசேரியின் கொடை (முலதன செலவினம்) | 596,664,061.18 | 599,204,466.22 |
| அங்குலான முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதி | 6,180,000.00 | |
| **நிதிசார் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | **602,844,061.18** | **599,204,466.22** |
| காசும் காசுக்கு சமமானவையினதும் தேறிய அதிகரிப்பு / (குறைவு) வித்தியாசம் | (12,951,802.27) | 40,147,245.49 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | 93,992,917.10 | 53,845,671.61 |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் | **81,041,114.83** | **93,992,917.10** |
| | | |

**குறிப்பு – காசுப் பாய்ச்சல் கூற்று**

| | |
|---|---|
| 31.12.2014 ஆம் திகதியில் காசேட்டின் மீதி | |
| இலங்கை வங்கி, பத்தரமுல்லை (மீண்டெழும்) | 1,237,936.65 |
| இலங்கை வங்கி, பத்தரமுல்லை (மூலதன) | 27,810,011.23 |
| இலங்கை வங்கி, பத்தரமுல்லை (அநுராதபுரம்) | 254,445.26 |
| இலங்கை வங்கி, பத்தரமுல்லை (நகரக் குடியிருப்பு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்) | 16,450.39 |
| சேமிப்புக் கணக்கு | 44,107,167.68 |
| சேமிப்புக் கணக்கு – முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதி | 7,615,103.62 |
| | **81,041,114.83** |

**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின்**

**20143 டிசெம்பர் 31ஆந் திகதிக்கான**

**உரிமைமாற்றம் பற்றி கூற்று**

| விபரம் | மூலதனம் | திரண்ட நிதியம் | அரச கொடை | தடுத்து வைக்கப்பட்ட தொகை | வருமானத்திற்கு எதிராக பதிவழித்தல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2014.˙.01.˙.01 இல் மீதி | - | (19,887,113.92) | 1,315,464,107.72 | 4,605,240.63 | 199,332,113.44 | 1,499,514,347.87 |
| குறித்த ஆண்டில் பிரதான பெறுகைகள் | | | 562,947,852.98 | | | 562,947,852.98 |
| வருமான சேர்மம் | | | | 93,094,358.50 | | 93,094,358.50 |
| காலப்பகுதிக்கான மிகை/(குறை) | | (10,284,599.09) | | 1,133,396.87 | | (9,151,202.22) |
| ஆண்டினுள் செலுத்தல் | | | | | 106,830,733.83 | 106,830,733.83 |
| **2014.˙.12.˙.01 இல் மீதி** | **-** | **(30,171,713.01)** | **1,878,411,960.70** | **98,832,996.00** | **306,162,847.27** | **2,253,236,090.96** |

2016 மார்ச் 13 ஆம் திகதி

தவிசாளர்,
நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை.

**நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 2014 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971இன் 38ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 2014 திசெம்பர் 31ஆம் திகதிக்கான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றம் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கங்களுடனான தகவல்களின் பொழிப்பைக் கொண்ட 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971இன் 38ஆம்இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(1)ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை எதிர்காலத்தில் வெளியிடப்படும்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள், இலங்கை அரசதுறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமகச் சமர்ப்பிப்பது தொடர்பாக அவசியமாகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3. கணக்காய்வின் பொறுப்பு

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர்மட்ட கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமனங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இசைவாக இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்புடையவாறு எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஒழுக்கநெறிக் கோவைகளின் தேவைகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் மற்றும் நிதிக் கூற்றுக்கள் போதியளவில் தவறான கூற்றுக்கள் அற்றது என்பது பற்றி நியாயமான சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்காக கணக்காய்வு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது என இந்த நியமங்கள் எதிர்பார்க்கின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்காக நடைமுறைகளை அமுல்படுத்துவதும் கணக்காய்வில் உள்ளடங்கும். தெரிவு செய்யப்பட்ட நடவடிக்கை முறைகள், மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்டக்கூடிய அளவைரீதியான தவறான கூற்றுக்களிலிருந்து அபாய மதிப்பீடு கணக்காய்வாளரின் தீர்மானத்தின் அடிப்படையில் அமைகின்றது. மேற்படி அபாயங்களை மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு மற்றும் நியாயமான சமர்ப்பணம் மீது ஏற்புடையதாகின்ற உள்ளகக் கட்டுப்பாடு கணக்காய்வின் போது கவனத்தில் கொள்ளப்பட்ட போதிலும் அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைதிறன் தொடர்பாக கருத்துக்களை வெளியிட உத்தேசிப்பதில்லை. முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை மற்றும் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மையை மதிப்பீடு செய்தல் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் தொடர்பிலான மதிப்பீடும் கணக்காய்வில் உள்ளடங்குகின்றன. 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3) மற்றும் (4)ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நர்மாணிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு கருத்துக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை என்பதும் அவை பொருத்தமானவை என்பதும் எனது நம்பிக்கையாகும்.

### 1.4. தகைமைவாய்ந்த கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்துரைகளாவன தகைமைவாய்ந்த கணக்காய்வுகள் செய்யப்படுகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. தகைமைவாய்ந்த அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2.ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகள் தவிர, நிதிக் கூற்றுக்ளின் மூலம் 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதிசார் நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன்

நிதிசார் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை அரசாங்க கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையாகவும், நியாயமான நிலைமையையும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1. நிறுவனம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 16(3) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, அதிகார சபையின் ஆரம்ப மூலதனம் ரூபா மில்லியன் 5000 ஆக இருத்தல் வேண்டும் என்பதுடன், இது பகுதிபகுதியாக அரசாங்க திரண்ட நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டுமாயினும் 2014 ஆம் ஆண்டு நிறைவடையும் வரை அதிகார சபைக்கு மூலதனம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 16(உ) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, குறைந்த செலவின வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி வழங்கும் பொருட்டு ஆதன அபிவிருத்தியாளர்களிடமிருந்து சேவைக் கட்டணமாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை திரட்டுகின்ற சகல தொகைகளும் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதியத்தில் செலவு வைக்கப்படல் வேண்டுமாயினும் 2010 டிசம்பர் 14 ஆம் திகதிய 10∴2951∴504∴012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த சேவைக் கட்டணங்கள் அறவிடப்படுவது நிறுத்தப்பட்டிருந்தன் காரணமாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையானது தமது பிரதான வருமான வழியை இழந்திருந்தது. இதற்கமைய திறைசேரி அல்லது அரசாங்கத்தின் வேறு நிதிசார் நிவாரணங்கள் இன்றி அதிகார சபையை பேணிவருவதில் உறுதியற்ற நிலை காணப்படுகின்றது.

### 2.2.2. இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இற்கு அமைய மீளாய்வு ஆண்டுக்கு முன்னைய ஆண்டின் வித்தியாசங்களுடன் தேறிய சொத்துக்கள் அல்லது உரிமையாண்மையின் மாற்றங்களுக்கான கூற்றுத் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நியமத்திற்கு முரணாக நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாச் பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ரூபா 5,738,638 ஆன பணிக்கொடை ஏற்பாடுகள் மற்றும் ரூபா 306,162,847ஆன நடைமுறைப் பொறுப்புக்கள் தேறிய சொத்துக்கள் உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்றில் சேர்மநிதியத்தின் கீழ் மற்றும் பிற்போடப்பட்ட அறவீட்டுக் கொடைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 சனவரி மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 129,900 ஆன கட்டிடப் பொருட்கள் மீளாய்வு ஆண்டின் கொள்வனவுகளாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டள்ளன.

(ஆ) மீளாய்வு ஆண்டில் செல்லுபடியற்றதாக்கப்பட்ட ரூபா 656,410 பெறுமதிமிக்க காசோலைகள் கணக்குகளில் வைப்புச் செய்யப்படாமை காரணமாக 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான காசு மீதி மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் மீதி அத்தொகையினால் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) செலுத்த வேண்டிய பத்திரிகை விளம்பரக் கட்டணம் ரூபா 615,776 ஆன தொகை கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வு ஆண்டில் கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதியான ரூபா 1,144,718 ஆன வளிச்சீராக்கி இயந்திரமும், உபகரணங்களும் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

செய்யப்பட்டிருந்தன.

(உ)

அநுராதபுரம் வீடமைப்புக் கருத்திட்டத்தில் கையளிக்கப்பட்டிருந்த 63 வீடுகளுக்காக மீளாய்வு ஆண்டில் அறவிடப்பட்டிருந்த ரூபா 217,551 ஆன வீடமைப்புக் கடன் தவணைப்பணம், சட்டத்திற்கு அமைய நிதியமொன்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சஹஸ்புர மற்றும் சிங்ஹபுர வீடமைப்புக் கருத்திட்டம்

i. மேற்படி கருத்திட்டத்தை புதுப்பிப்பதற்காக 2013 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கிடைத்த ரூபா 13,761,694 ஆன தொகை மற்றும் ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 13,766,209 ஆன முற்பணத் தொகை ஒன்றுக்கொன்று சமன்செய்யப்பட்டு 2013 ஆம் ஆண்டில் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்தமையானது மீளாய்வு ஆண்டிலும் சீராக்கல் செய்யப்படாமை காரணமாக முறையே நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் மேற்படி தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

ii. வீடமைப்புக் கருத்திட்டத்தை புதுப்பித்தல் மற்றும் மின்தூக்கியை புதுப்பிப்பதற்காக ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையில் தீர்க்கப்படாத முறையே ரூபா

5,985,600 மற்றும் ரூபா 1,904,928 ஆன முற்பணங்கள் நடைமுறை சொத்துக்களின் கீழ் தீர்க்கப்படாத முற்பணத்தின் கீழ் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக நிதி ஆண்டின் செலவினமாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

iii. வீடமைப்புத் திட்டத்தைப் புதுப்பிப்பதற்காக மீளாய்வு ஆண்டின் இறுதித் திகதியில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் ஒப்பந்ததாரருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,858,048 ஆன தடுத்துவைத்தல் வரி கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 48 ஆம் தோட்ட வீடமைப்புத் திட்டத்தில் விற்பனை செய்யவுள்ள 14 வீடுகளின் செலவினம் மற்றும் தேறிய செலுத்த வேண்டிய பெறுமதிக்கு இடையிலான வித்தியாசம் அறவீட்டு சேர்மமாக இனங்காணப்பட்டுள்ள போதிலும் மேற்படி வீடுகளின் செலவினத்தைக் கவனத்தில் கொள்ளாது ரூபா 34,500,000 ஆன விலைமதிப்புப் பெறுமதி மூலதன சேர்மக் கணக்கிற்கு செலவுவைக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு விற்பனை செய்வதற்காக பூர்த்தி செய்யப்பட்டிருந்த செலவினம் ரூபா 1,172,520,527 ஆன அங்குலான வீடமைப்புத் திட்டத்தின் 288 வீடுகளின் நியாயமான பெறுமதி அல்லது செலவினம் ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதிக்கு நடைமுறை சொத்தின் கீழ் குறிப்பிட வேண்டுமாயினும் வீடமைப்புச் செலவினம் பூர்த்தி செய்யப்படாத நடைமுறையல்லாத சொத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) அரசாங்க கொடையாகக் கிடைத்த செலவினம் ரூபா 22,450,000 ஆன மோட்டார் வாகனத்திற்கு மீளாய்வு ஆண்டுக்குரிய ரூபா 4,490,000 ஆன தேய்மான ஏற்பாடுகள் மற்றும் செலவினத்திற்குச் சமமாக இனங்காணப்பட்டிருந்த பிற்போடப்பட்ட வருமானம் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ)அதிகார சபையின் சட்டத்திற்கு அமையத் தாபிக்கப்பட்ட நிதியமொன்றுக்கு வீடமைப்புக் கடன் தவணைகளின் பெறுகைகள் செலவு வைக்கப்படல் வேண்டுமாயினும், மீளாய்வு ஆண்டில் கிடைத்த ரூபா 3,583,819 ஆன விசிறி வீடமைப்புக் கடன் தவைணப் பணம் அதிகார சபையின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ)மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 93,094,359 ஆன மூலதன சேர்மக் கணக்கின் மீதி நிதிக் கூற்றுக்களில் அறவீட்டுச் சேர்மமாக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஓ)கடந்த ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 370,000 ஆன வாடகை வருமானம் குறைவாகக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டமை,ரூபா9,900,000 ஆன வருமானம் அதிகமாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டமை மற்றும் ரூபா 8,184,167 ஆன மோட்டார் வாகனத் தேய்மானம் குறைவாக ஒதுக்கப்பட்டமையானது, இலாப நட்டக் கணக்கின் முன்கொண்டுவந்த

மீதியில் சீராக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும், வரலாற்றுக்குப் பொருத்தமானவாறு கணக்குகள் மீளத் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) தேறிய சொத்துக்கள், உரிமையாண்மையின் மாற்றங்களின் கூற்றில் அரசாங்க கொடையின் ஆரம்ப மீதி ரூபா 93,094,359 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன், மேற்படி தொகை மீளாய்வு ஆண்டில் பெறுகைகளில் கூடுதலாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(க) துருஇத்துருகம வீடமைப்புக் கருத்திட்டத்தில் 108 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தினால் ரூ.மி. 65.0 ஆன கொடை வழங்கப்பட்டுள்ள போதிலும் மேற்படி நிர்மாணிப்புக்கு ரூபா 85,434,855 செலவாகியிருந்தது. அரசாங்கத்தின் கொடைக்கு மேலதிகமாக தாங்கிக்கொள்ளப்பட்ட ரூபா 20,434,855 ஆன தொகையை நிதியீட்டல் செய்துகொண்ட முறை பற்றிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ச) துருஇத்துருகம வீடமைப்புக் கருத்திட்டத்தில் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த 99 வீடுகளிலிருந்து கிடைத்த ரூபா 54,213,472 ஆன தொகையை பிற்போடப்பட்ட வருமானமாகவும் மற்றும் விற்பனை செய்யப்படாதிருந்த 8 வீடுகளுக்குரிய ரூபா 4,380,887 ஆன செலவினத்தை கொடையாகவும் பதிவு செய்வதற்குப் பதிலாக ரூபா 58,594,358 ஆன மொத்தத் தொகையையும் மூலதன சேர்மக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு எஞ்சிய 08 வீடுகளின் பெறுமதி தேறிய நின்ற பெறுமதி அல்லது செலவினம் ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதிக்கு கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டுமாயினும் இது ரூபா 6,328,507 ஆன செலவினத்திற்கு கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஞ) ரியல் எஸ்ரேட் எக்ஸ்சேன்ஜ் தனியார் கம்பனியின் நடவடிக்கைகளை நிறைவு செய்த பின்னர் மேற்படி கம்பனிக்கு உரித்தான 05 வாகனங்கள் அதிகார சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை அதிகார சபைக்குப் பொறுப்பேற்று கணக்குகளில் பதிவு செய்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

கூட்டுத்தொகை ரூபா 3,891,912 ஆன கடன் கொடுத்தோர் மிதியை சுமார் ஏழு வருடகாலமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3. சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

2014 நவம்பர் 21 ஆம் திகதிய 05.். 2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு அமைய இலாபம் உழைத்துள்ள நிறுவனங்களின் ஊழியர் ஒருவருக்கு ரூபா 15,000 ஆன

மிகைஊதியத்தைச் செலுத்துவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், அதிகார சபையினால் மீளாய்வு ஆண்டில் ரூபா மில்லியன் 10 ஆன குறைவு உழைக்கப்பட்ட நிலையில், மேற்படி சுற்றறிக்கையின் அடிப்படையில் அதிகார சபையின் ஊழியர்கள் 89 பேருக்கு ரூ.மி. 1.3 ஆன மிகை ஊதியக் கொடுப்பனவு நிருவாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களுக்கு அமைய 2014 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டில் அதிகார சபையின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 10,284,599 ஆன குறையாக காணப்பட்டதுடன் இதற்கு மாற்றமாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,032,874 ஆக இருந்ததனால் மீளாய்வு ஆண்டின் நிதிப் பெறுபேறு ரூபா 16,317,473 ஆன வீழ்ச்சி அடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. நிதிப் பெறுபேறின் இந்த வீழ்ச்சிக்கு அபிவிருத்திச் செலவினம் மற்றும் நிருவாகச் செலவினம் முறையே ரூபா 25,858,349 இனால் மற்றும் ரூபா 11,563,032 இனால் அதிகரித்துள்ளமை பிரதானமானமாகத் தாக்கம் செலுத்தியுள்ளன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) சிங்ஹபுர வீடமைப்புத் திட்டத்தின் 15 வீடுகள் 05 வருடகாத்திற்கு ஒரு மாதத்திற்கு ரூபா 5,000 வீதம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொடர்ச்சியாக 03 மாதங்களுக்கு குத்தகை வாடகை செலுத்தப்படவில்லை எனின், ஒப்பந்தத்தை நிறைவு செய்தல் வேண்டும். எனினும் 05 மாதம் முதல் 24 மாதங்கள் வரையான காலப்பகுதிக்கு குத்தகை வாடகை செலுத்தாத 10 வீடுகளின் குத்தகை ஒப்பந்தங்கள் ரத்துச் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், குறித்த குத்தகை ஆவணக் கோப்புக்கள் மற்றும் நிலுவைக் குத்தகை வாடகை ஆவணங்கள் முறையாகப் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வு ஆண்டில் நடாத்தப்பட்ட உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு ‘‘கொழும்புச் சிறுவர்கள்’’ எனும் நாடகம் மற்றும் வீதி உணவு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 23,449,601 ஆன தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், இதன் போது ஆடை அழங்காரங்கள், ஒலிபெருக்கி, பயிற்றுவிப்பாளர்கள், உபகரணங்களை வாடகைக்குப் பெறுதல் மற்றும் விளம்பரம் செய்யும் பொருட்டு மொத்த செலவினத்தில் முறையே 42 சதவீதம், 18 சதவீதம், 17 சதவீதம் செலவிடப்பட்டிருந்த போதிலும், செலவின் உற்பத்தித்திறன் உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) அங்குலான வீடமைப்புத் திட்டத்தின் தடுத்துவைத்தல் தொகை ரூபா 45,491,256 ஆன தொகை கருத்திட்டம் நிறைவுசெய்யப்பட முன்னர் வங்கிப் பிணையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி வங்கிப் பிணை 2014 நவம்பர் 06 ஆம் திகதி காலாவதியாகியுள்ளது. மேலும் இவற்றில் ரூபா 22,722,883 இற்குரிய வங்கிப் பிணைகள் 2015 செப்தெம்பர் 31 ஆம் திகதிவரையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2. பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வு ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கை 111 ஆகும் என்பதுடன் உண்மையான பதவியணியினரின் எண்ணிக்கை 122 ஆகும் என்பதுடன், வெற்றிடங்களின் எண்ணிக்கை 04 ஆகும் என்பதுடன் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 15 ஆகும்.

## 5. கணக்கீட்டு நடவடிக்கைகளின் தன்மை மற்றும் நல்லாட்சி

### 5.1. வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு

அரசாங்கத்தின் வருடாந்த மதிப்பீட்டுப் பணிகளுக்காக வரவு செலவுத்திட்டம் தயார் செய்யப்பட்டிருந்த போதிலும், அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மையான தகவல்களுக்கும், வரவு செலவுத்திட்டத்தின்படியான தகவல்களுக்கும் இடையிலான வித்தியாசங்களை அவதானிக்கக்கூடியவாறு வரவு செலவுத்திட்டமானது தயார் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக அதிகார சபையின் தவிசாளரது கவனத்துக்கு அடிக்கடி கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்குப் பதிவு

(ஆ) நிதி முகாமைத்துவம்

(இ) வாகனப் பயன்பாடு

(ஈ) பதவியணி நிருவாகம்

(உ) ஒப்பந்த நிருவாகம்

ஒப்பம் ∴ எச்.எம். காமினி விஜேசிங்க

கணக்காய்வாளர் தலைமை அதிபதி